ஓசை: 25 குரல்: 178 புதன்கிழமை 15 டிசம்பர் Wednesday 15th December 2021 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760




www.facebook.com/Thinakkural www.twitter.com/ThinakkuralNews email: daily@thinakkural.lk | www. thinakkural.lk



# தினக்குரல்

தினக்குரல்

An Independent Daily Voice In Tamil

Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021

25 ANNIVERSARY

பக்கம்: 12 | விலை: 30




## இழப்புகளுக்கு காப்புறுதி

### லிட்ரோ நிறுவனம் தீர்மானம்

க.பிரசன்னா

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டர்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு பயன்படுத்துகையில் ஏற்படும் விபத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதியினை வழங்குவதற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் கடந்த சில மாதங்களாக

பக்கம் 04

# மேலும் இறக்குமதி கட்டுப்பாடு?



நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதிகளை மேலும் கட்டுப்படுத்த வேண்டியிருக்குமென என நிதியமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இதனைத்தெரிவித்திருக்கும் அமைச்சர் எவ்வாறாயினும், எரிபொருள், மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதிகள் மேலும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்அதே வேளை டொலர் பற்றாக்குறையை

பக்கம் 04

## எரிபொருள் இறக்குமதியில் 'டொலரால் நெருக்கடி'

ந.ஜெயகாந்தன்

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறையால் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வலுசக்தி

பக்கம் 04

## எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இலவச சட்ட உதவி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



நாடு முழுவதும் எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவியை வழங்கும் என்றும் அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தரம் இல்லாத அரசாங்கத்தைக் கொண்ட நாட்டில் தரமான எதையும் எதிர்பார்க்க முடியாது என்றும் தரமற்ற ஆட்சியை அகற்றுவதே மேற்கொள்ள வேண்டிய விடயம்

எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

தரமற்ற உர இறக்குமதியினால் நாடு பெரும் பேரழிவிற்குள் தள்ளப்பட்டுள்ளதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர்,நாட்டின் பொருளாதாரத்தையும்,

பக்கம் 04

லிட்ரோ நிறுவனத்திற்கு

## நீதிமன்றம் இன்று வரை கால அவகாசம்!

எரிவாயு சிலிண்டர்களின் கலவையை நாளைய தினம் (இன்று) காட்சிப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நீதிபதிகள் குழாமிற்கு விளக்கமளிக்குமாறு லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம்நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களால் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெற உத்தரவிடுமாறு கோரி சிவில் சமூக செயற்பாட்டாளர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல்

பக்கம் 04

## 13 ஐ தீர்வாக ஏற்போர் பச்சைத் துரோகிகள்

### கஜேந்திரகுமார் கூறுகிறார்




தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க நினைக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13ஆவது திருத்தத்தை தமிழர்களுக்கான தீர்வாக நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்.காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற

பக்கம் 04

## கட்சி சார்பான முரண்பாடுகளால் தகுதி வாய்ந்த யாழ். நகர முதல்வரை இழக்க இடமளிக்கக்கூடாது

### நீதியரசர் விக்னேஸ்வரன் வலியுறுத்தல்



வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த யாழ் நகர முதல்வரை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ் மாவட்ட எம்.பி.யும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்தற்போதைய முதலவர்மணிவண்ணனிடம் உள்ள திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, யாழ் மாநகரசபையின் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதால் நகர முதல்வர் வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்றஎண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதை நான் அறிவேன். மக்கள் பிரதிநிதிகள் தங்கள்சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்

பக்கம் 04

## தரமற்ற திரவ நைட்ரசன் உரமே வெடிப்பிற்கு காரணம்



பேராதனை விவசாய பீடப் பேராசிரியர் மாரம்பே

க.பிரசன்னா

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திரவ நனோ நைட்ரஜன் உரமானது தரமில்லாதமையே உரக் கேன்கள் வெடிப்பிற்கு காரணமாகுமென பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

உர கேன்கள்சிறப்பான தரத்தை பின்பற்றி தயாரிக்காமையினாலேயே வெடிப்பு ஏற்படுவதால் அதற்கு திரவ உர உற்பத்தியாளர்களே பொறுப்பு கூறவேண்டும். உர உற்பத்தி செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள நுண்ணுயிரிகள்

பக்கம் 04

## சீன உரக் கப்பலுக்கு 6.7 மில். டொலர் கொடுப்பனவு செலுத்த அரசு முடிவு

ந.ஜெயகாந்தன்

சீன உரக் கப்பலுக்காக 6.7 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இரு தரப்பினருக்கும் பாதிப்பில்லாதவாறு, இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் இந்த் தொகையை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நீதி அமைச்சர் அலி ஷப்ரி ஆகியோரால் இது தொடர்பாக அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்து கப்பலில் சேதனப் பசளை கொண்டுவரப்பட்ட நிலையில்,

பக்கம் 04

## சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதா?

### அமைச்சரவையில் இருவேறு நிலைப்பாடுகள்

ந.ஜெயகாந்தன்

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போது இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதால் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடுமாறு பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்து வரும் நிலையில், அது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ளமையினால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதன்போது தற்போது நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி மற்றும் டொலர் பற்றாக்குறை தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட

பக்கம் 04

## 6 மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசி அறிமுகம்



இன்னும் 6 மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி அறிமுகம் செய்யப்படும் என இந்தியாவின் சீரம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவாக்சின்' மற்றும் சைடஸ் கடிலா நிறுவனத்தின் 'சைகோவ் டி' ஆகிய குழந்தைகளுக்கான கொரோனா தடுப்பூசிகளின் பரிசோதனை ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளன. 'கோவிஷீல்டு' தடுப்பூசியை தயாரித்து வரும் சீரம் இந்தியா நிறுவனம் 'கோவோவாக்ஸ்' என்ற குழந்தைகளுக்கான தடுப்பூசியை தயாரித்துள்ளது. இதை, 12 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு செலுத்தி, இரண்டு மற்றும் மூன்றாம்

பக்கம் 04

செலான் வங்கியிடமிருந்து

நிலையான வைப்புகளிற்கு உயர்ந்த வட்டி வீதம்

| வைப்புக்காலம் | வருடாந்தவட்டி | AER (வ.வி.வ) |
| --- | --- | --- |
| 6 மாதம் | 5.50% | 5.58% |
| 12 மாதம் | 6.50% | 6.50% |

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0112008888 ஐ அழைக்கவும்

Brand Finance Rating "A +" Fitch Rating "A" (lka)

கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

செலான் வங்கி

# சுமந்திரனுக்கும் சிஷ்யனுக்கும் மூளை தெளிவாகி இருக்கலாம்

## 13 கதை தொடர்பில் கஜேந்திரகுமார் கிண்டல்



அரசியலமைப்பு 13 ஆம் திருத்தம் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் ஆரம்ப புள்ளி என இதுவரை கூறிவந்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் அவரது சிஷ்யன் சாணக்கியன் ஆகியோரின் கருத்தில் வெளிநாடு சென்று வந்த பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளது தெரிகிறது என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வெளிநாட்டுக்குச் சென்று வந்த பின்னர் சிலவேளைகளில் அவர்களின் மூளை தெளிவாகி இருக்கலாம் எனவும் அவர் கிண்டலாகக் கூறினார். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசிய கஜேந்திரகுமாரிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டமே தமிழ் மக்களின் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாக இருக்கும் என சுமந்திரன் பல வருடங்களாக கூறி வந்தார். அவருடைய சிஷ்யனான சாணக்கியன் கடந்த மாதத்துக்கு முன்னர் வரை 13 ஆவது திருத்தத்தின் அவசியம் பற்றிப் பேசிவந்தார். இருவரும் வெளிநாடு சென்று வந்த பின்பு 13காலாவதியாகிவிட்டது. அதில் ஒன்றுமில்லை எனக் கூறுவது ஏன்? எனத் தெரியவில்லை.

ஒருவேளை வெளிநாட்டில் பலரை சந்தித்திருப்பார்கள். அது அவர்களின் மூளையில் ஒரு தெளிவை ஏற்படுத்தி இருக்கலாம் எனவும் கஜேந்திரகுமார் கூறினார்.

# கோந்தை பிட்டி கடலில் காணாமல்போன 2 ஆவது மீனவரும் சடலமாக மீட்பு

**தலைமன்னார் நிருபர்**

மன்னார் கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் காணாமல் போன நிலையில் திங்கட்கிழமை காலை ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் மற்றைய நபர் செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்த தர்ஷன் (வயது19) என்பவர் சடலமாக மீட்கப்பட்டார். மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன்(வயது28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் காணாமல் போயிருந்தார். அவரை தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர். எனினும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வரை குறித்த மீனவர் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் உப்பளம் கடற்கரை பகுதியில் குறித்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சடலம் தற்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத தரப்புகளுடன் இணைந்து செயற்பட தயார்

## அமெரிக்க பதில் தூதுவருக்கு அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் கடற்றொழில் சார் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்டின் ரி ஹீலிகலந்துரையாடினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது, தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கேட்டறிந்த அமெரிக்க பதில் தூதுவர், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக தமிழர் தரப்புக்களிடம் ஒருமித்த கருத்து நிலவுவது முக்கியம் என்ற கருத்தினை முன்வைத்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத, நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற தரப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதாகவும், ஆனால் ஏனைய சில தரப்புக்கள் சுயலாபங்களுக்காக மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய தோற்றுப்போன வழிமுறைகளையே தொடர்ந்தும் பேசுவதாக தெரிவித்தார். அத்துடன் கடந்த காலங்களில் தன்னால் வெளிப்படுத்தப்பட்ட எதிர்வுகூறல்கள் சரியானது என்பதை வரலாறு நிரூபித்திருப்பதனையும் சுட்டிக்காட்டினார். மேலும், காணாமல் போனோர் விவகாரத்திற்குப் பரிகாரம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆர்வம் வெளியிட்டுள்ள நிலையில், அது தொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, கடற்றொழில் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும், கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் தொர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமெரிக்காவின் இலங்கைக்கான பதில் தூதுவருடன் கலந்துரையாடினார்.

# நகரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு பிரகடனப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

**ந.ஜெயகாந்தன்**

பிரதேச சபை எல்லைகளிலுள்ள நகரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றை பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நகரப் பிரதேசமாக வகைப்படுத்தும் போது அதற்காகப் பிரயோகிக்கும் முக்கியமான குறிகாட்டியாக "நிர்வாக ரீதியான அலகு" பயன்படுத்தப்படும். அதற்கமைய, மாநகர சபை மற்றும் நகர சபைகள் மாத்திரம் தற்போது உத்தியோகபூர்வமாக நகரப் பிரதேசங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த குறிகாட்டிகளில் காணப்படும் குறைபாடுகளால் கூடுதலாக நகரமயமாகிய பிரதேசங்கள் இன்னும் கிராமிய பிரதேசங்களாகவே இனங்காணப்படுவதால், நகரமயமாதல் பற்றிய சரியான வரைவிலக்கணப்படுத்தலின் தேவை உருவாகியுள்ளது.

2000 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டு 13 இலக்க நகரங்கள் மற்றும் கிராமங்களை உருவாக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நகர அபிவிருத்திப் பிரதேசத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபை எல்லைகளில் அமைந்துள்ள நகரப் பிரதேசங்களை அடையாளங் காண்பதற்கும், குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய பிரதேச சபை எல்லைகளில் அடையாளங் காணப்படும் நகர பிரதேசங்களை நகர மற்றும் கிராமங்களை உருவாக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பிரகடனப்படுத்துவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# மட்டக்களப்பில் தபால் சேவை ஸ்தம்பிதம்

**களுவாஞ்சிகுடி நிருபர்**

தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன நேற்று செவ்வாய்கிழமை தபால் ஊழியர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தம் காரணமாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால்சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு பிரதம தபால் நிலையம் உட்பட மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள தபால் அலுவலகங்கள் உப தபால் அலுவலகங்கள் செயலிழந்து காணப்பட்டன. தபால் விநியோகம் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பித்திருந்தன. தபால் சேவைகளைப் பெற தபால் நிலையங்களுக்கு வந்தோர் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

# தமது கட்டளைகளுக்கு கீழ்படியும் உறுப்பினர்களை குழுக்களுக்கு நியமிக்கவே பாராளுமன்றம் ஒத்திவைப்பு

## மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

**க.பிரசன்னா**



அரசாங்கம் வர்த்தகர்களுக்கு சார்பாக செயற்படுவதுடன் அரசாங்கத் தலைவர்களின் கட்டளைகளுக்கு கீழ்படியும் உறுப்பினர்களை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு மற்றும் அரசாங்க கணக்குகள் குழுவிலுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்கும் முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பு எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

, பாராளுமன்ற உறுப்பினர்களான சரித ஹேரத், அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் இஸ்ஸ விதாரண ஆகியோரை பதவியில் இருந்து நீக்க அரசாங்கம் முயற்சிப்பதால், பொருளாதார நெருக்கடியின் போது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாம் சந்தேகிக்கின்றோம்.

பாராளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச எடுத்த தீர்மானம், தற்போதைய உறுப்பினர்களை மாற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டணியினரை தெரிவுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கும் அரசாங்கத்தின் சாதுரியமான நடவடிக்கையாகும்.

வெளிநாட்டு கையிருப்பு தொடர்ந்து குறைந்து வருவதால், எதிர்வரும் வாரங்களில் இலங்கை பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் மீதமுள்ள 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை கையிருப்பில் வைத்துக் கொண்டு நாடு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும்.

மாதாந்த மருந்து, உணவு மற்றும் எரிபொருள் செலவீனமான 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை பூர்த்தி செய்த பின்னர் குறிப்பிட்ட தொகையே மிச்சமாகும். இதனால் எதிர்வரும் நாட்களில் இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றார்.

# பூஸ்டர் தடுப்பூசி பெற்றவர் சில மணி நேரத்தில் மரணம்

## உடற்கூற்று பரிசோதனைக்கு நடவடிக்கை

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சில மணிநேரத்தில் மரணமடைந்துள்ளார்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது ஏற்கனவே சினோபாம் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திங்கட்கிழமை பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றிருந்ததுடன், சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய தடுப்பூசி ஏற்றிய பின் சிறிது நேரம் அவ்விடத்தில் அமர்ந்து விட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கி சென்றுள்ளார்.

வீடு சென்று சில மணி நேரத்தில் திடீரென குறித்த நபர் மரணமடைந்துள்ளார். இதனையடுத்து அவரது சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அவர் ஏற்கனவே சில நோய்களுக்கு உட்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியா, காத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அத்துடன், மரணத்திற்கான காரணம் குறித்து அறிந்து கொள்ள அவரது சடலத்தை உடனடியாக உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டொலர் தட்டுப்பாட்டிற்கு தீர்வு வழங்கப்படும் வரை இறக்குமதியாகும் பால்மாவிற்கு தட்டுப்பாடு நிலவும்

## பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம்

பால்மா இறக்குமதிக்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள டொலர் தட்டுப்பாடுக்கு நிவாரணம் கோரி நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை டொலர் தட்டுப்பாட்டிற்கான தீர்வு வழங்கப்படும் வரையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற்கு தட்டுப்பாடு நிலவும் என அந்த சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக 50 சதவீதமான பால்மாக்களையே இறக்குமதி செய்ய முடிகின்றது. அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களின் விலைகளில் மீண்டும் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினையினால் இறக்குமதிகள் மேலும் மட்டுப்படுத்தப்படும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்துள்ளார். / எரிபொருள், ஔடதம், அத்தியாவசிய உணவு பொருள் ஆகியவற்றின் இறக்குமதிக்காக மாத்திரமே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கு இணையாக சந்தையில் தேசிய பால்மாக்களுக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. மழை மற்றும் மாகாண சபை ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்கை கருத்தரிப்பு நிறுத்தப்பட்டமை ஆகிய காரணிகளால் தேசிய பால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனத்தின் தலைவர் லசந்த விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# தரமற்ற எரிபொருள் விற்பனை குறித்து மக்கள் முறைப்பாடுகளை ஆராய விசேட பொறிமுறை

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

தரமற்ற பெற்றோல் , மண்ணெண்ணெய், டீசல் உள்ளிட்டவைகள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்ற முன்வைப்பதுடன் இது குறித்த முறைப்பாடுகளை எங்கு செய்வது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும், இது குறித்த முரண்பாடுகளை நீர்க்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் வலுசக்தி அமைச்சு இணைந்து நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் விதமாக விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பெற்றோலியம் மற்றும் உயராய்வு எண்ணெய் நெருக்கடி நிலைமைகளை ஆராயவும், பெற்றோலிய கூட்டுத்தாபன நெருக்கடி நிலைமைகள் மற்றும் முறைபாடுகளை ஆராய்ந்து தீர்வு காணவும், விசேட பொறிமுறை ஒன்றினை அமைத்துள்ளதுடன், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் வலுசக்தி அமைச்சு இணைந்து நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் விதமாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த சில மாதங்களாக நாட்டில் மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. தரமற்ற பெற்றோல் , மண்ணெண்ணெய், டீசல் உள்ளிட்டவைகள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். இது குறித்து யாரிடம் புகாரளிப்பது, யார் உரிய அதிகாரிகள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இது மக்கள் மத்தியில் நம்பிக்கையற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்.

இந்த புகார்களை கையாண்டு அவற்றிருக்கு தீர்வு வழங்கும் வேலைத்திட்டத்தை இரண்டு கட்டங்களாக முன்னெடுப்பதாகவும், இதில் சேவை வழங்குநர்களின் தலையீட்டின் மூலம் புகார்களைப் ஆராய்வது முதலாம் கட்டமாகவும், அதில் முரண்பாடுகள் ஏற்படும் வேளையில் சேவை வழங்குநர் மற்றும் சில நியமன அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் ஒரு தீர்வை பெற்றுக்கொடுப்பது இரண்டாம் கட்ட நடவடிக்கையாகும் என்றார்.

# பருத்தித்துறை வைத்தியசாலையில் வெடித்து சிதறிய எரிவாயு அடுப்பு

## துன்னாலையிலும் வெடித்ததில் பெண் காயம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சமையல் அறை மற்றும் வீடொன்று உட்பட இரு இடங்களில் காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்ட காஸ் அடுப்பு வெடித்தது. எனினும் இதில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

அதேபோல் துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஒருவரது வீட்டிலும் காஸ் அடுப்பு வெடித்தது. இதில் சமையலில் ஈடுபட்டிருந்த பெண் சிறு காயத்துடன் தப்பினார். வீட்டின் லெவல் சீற்றும் இதன் போது உடைந்துள்ளது.

கடந்த 11ம் திகதியே தாம் புதிதாக காஸ் சிலிண்டரை கொள்வனவு செய்ததாக சம்பவம் இடம்பெற்ற வீட்டார் தெரிவித்தனர். இந்த வெடிப்புச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# பஸ் விபத்தில் இருவர் காயம்

**தலவாக்கலை நிருபர்**

அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி நேற்று செவ்வாய்க்கிழமை மின்கம்பத்திலும் மண்மேட்டிலும் மோதி விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த இருவர் சிறுகாயங்களுக்குள்ளாகினர். பஸ்ஸில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# 18 வயதுக்கு குறைவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்காதிருக்க முடிவு

## சட்டத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம்

**ந.ஜெயகாந்தன்**

18 வயதுக்கு குறைவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்காதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது

நீதிமன்றத் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் எதிராக மரண தண்டனையை விதித்தல் அல்லது குறித்துக் கொள்வதோ மேற்கொள்ளக் கூடாது எனவும், குறித்த தண்டனைக்குப் பதிலாக அந்நபர் ஜனாதிபதி விருப்பம் தெரிவிக்கும் வரைக்கும் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் தண்டனையை வழங்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் 53 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் உட்சேர்க்கப்படவில்லை. அதனால், நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவருடமாக சிறை வைக்கப்பட்ட தமிழ் இளைஞனுக்கு பிணை

**முள்ளிப்பொத்தானை , சீனக்குடா நிருபர்கள்**

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலகிருஸ்ணன் ரதிகரன் (வயது 28) என்ற இளைஞனுக்கு ஒரு வருடத்திற்குப் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று இவ்வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கி தீர்ப்பளித்தார். எதிராளியின் சார்பாக சட்டத்தரணி நா.மோகன் ஆஜராகியிருந்தார்.

மூதூர் சம்பூர் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குறித்த இளைஞன்; மாவீரர் தினத்தையொட்டி கவிதை ஒன்றினை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியமைக்காக 27.11.2020 அன்று பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிரான வழக்கு மூதூர் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் இவருடைய விடுதலைக்காக பல்வேறு தரப்பினரும் முயற்சி செய்துவந்தனர். அந்தவகையில் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய ரனித்தா மயூரன் குழுவினரால் சிரேஷ்ட சட்டத்தரணி ரத்தினவேல் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் பிணைக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்த நிலையில் இவ்வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிவான் மாணிக்கராசா இளஞ்செழியன் பிணை வழங்கி தீர்ப்பளித்தார்.

## 4 ஆவது தடுப்பூசியும் ஏற்ற வேண்டி வரும்?

நான்காவது கொரோனா தடுப்பூசியையும் எதிர்காலத்தில் ஏற்றுவதற்கான வாய்ப்புள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, பொதுமக்கள் தடுப்பூசி அட்டையை இயன்றளவு கவனமாக பயன்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி அட்டையை தரவு களஞ்சியத்திற்கு உள்வாங்கி, கியூ கோட் முறைமைக்குள் இணைத்து, கைத்தொலைபேசி ஊடாகவோ அல்லது வேறு முறைமையிலோ பயன்படுத்தும் வரையில், அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கட்டாயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எதிர்காலத்தில், மூன்றாம் தடுப்பூசியின் பின்னர், நான்காம் தடுப்பூசியையும் வழங்கவேண்டி ஏற்படலாம் என்றும் எனவே, தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

## பாரிய மண்மேடு சரிந்ததால் வீடு சேதம்

**பதுளை நிருபர்**

பசறை 13ஆவது மைல் கல்லருகே, கடும் மழையின் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை பாரிய மண்மேடு சரிந்துவீடொன்றின் மீது விழுந்தமையினால், அவ்வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது. அத்துடன் வீட்டுடமைகளுக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது, குறிப்பிட்ட வீட்டில் எவரும் இல்லாமையினால், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை .

## மலையக தபால் சேவைகள் பாதிப்பு

**பத்தனை நிருபர்**

தபால் ஊழியர்கள் ஆரம்பித்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை மலையக தபால் சேவைகள் பாதிப்புக்குள்ளாகின.


16 கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.அகில இலங்கை தபால் சேவை மற்றும் தொலைத் தொடர்பு ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

**அநுராதபுரம் நிருபர்**

வெலிகந்த சிங்கபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை வெலிகந்த சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.45 வயதுடைய வீரபுர,மதுரங்குளி பகுதியை வசிப்பிடமாக கொண்ட நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் . .சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் புதிய கூடு ஒன்றினை நிர்மாணிக்கும் போது மின்சாரம் தாக்கியுள்ளதில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.



# ஊவாவில் சகல வைத்தியசாலைகளிலும் இன்று காலை 7 மணி முதல் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பு

க.பிரசன்னா

ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இன்று காலை 7 மணி முதல் 24 மணித்தியால கூட்டு பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டத்தின் மற்றுமொரு கட்டமாக ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிலையங்களிலும் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

மருத்துவ ஆய்வுகூட வல்லுநர்கள், செவிலியர்கள், நிறைவுகாண் சுகாதார வல்லுநர்கள் மற்றும் துணை சுகாதார வல்லுநர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். சுகாதார நிபுணர்களின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல், பட்டதாரிகளின் சம்பளம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ரஜுக்கே குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், மருத்துவ நிர்வாகத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் சுகாதார சேவைகளைப் பெறும்போது பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கோரிக்கைகள் தொடர்பில் மூன்று மாதங்களாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டும் கோரிக்கை விடுத்தும் தீர்வு காணப்படவில்லை. சுகாதார அமைச்சர், துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் துறையுடன் தொடர்புடைய நிபுணத்துவம் இன்மையால் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டு தற்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் வியாழக்கிழமை 24 மணித்தியால வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்க நடவடிக்கையின் பின்னணியில் உள்ள காரணங்களையும், தொழிற்சங்க நடவடிக்கையால் பொதுமக்கள் சிரமப்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமை குறித்து பொது மக்களுக்கு அறிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பிக்கவின் கடவுச்சீட்டை விசா பெறுவதற்காக தற்காலிகமாக விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கடவுச்சீட்டை விசா பெறுவதற்காக தற்காலிகமாக விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் நேற்று செவ்வாய் கிழமை மனுவொன்றை தாக்கல் செய்த பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சட்டத்தரணிகள், தனது கட்சிக்காரர் பெப்ரவரி மாதம் வெளிநாடு செல்ல உள்ளதாகவும், தற்போது நீதிமன்ற காவலில் உள்ள அவரது கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி, குறித்த கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவனை பலத்த காயமடையச் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு பிணை வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது கடவுச்சீட்டை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது

# தபால் ஊழியர்களின் அடையாள பணிப்புறக்கணிப்பால் மக்கள் அவதி

க.பிரசன்னா

தபால் துறையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாடு முழுவதுமுள்ள தபால் ஊழியர்களினால் 24 கோரிக்கைகளை முன் வைத்து அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று நள்ளிரவு வரை முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாக இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் சிந்தக பண்டார தெரிவித்திருந்தார்.

தபால் துறையின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உடனடியாக பதிலளிக்கும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை, 653 தபால் நிலையங்கள் மற்றும் 3,410 உப தபால் நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தபால் திணைக்கள ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விநியோகத்தின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது. தபால் அமைச்சுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் பயனளிக்காத நிலையிலேயே சேவையிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## எரிபொருள்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கம்மன்பில கருத்து வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன .

எரிபொருள் இறக்குமதிக்காக 420 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று அமைச்சர் கம்மன்பில அதன்போது குறிப்பிட்டுள்ளதுடன், எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் இறக்குமதியின் போது பல்வேறு நெருக்கடி நிலைமைகள் ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கெரவலப்பிட்டி 'யுகதனவி' அனல் மின்நிலையம் தொடர்பான அமெரிக்க நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த வாரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டிருந்த போதும், அது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டுள்ளதால், அவர் நாடு திரும்பிய பின்னர் அந்த ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## எரிவாயு...

முன்பக்கத் தொடர்ச்சி...

விவசாய சமூகத்தின் வாழ்க்கையையும் அரசாங்கம் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

## 6 மாதங்களில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கட்ட பரிசோதனையை மேற்கொள்ள சீரம் இந்தியா நிறுவனத்துக்கு மத்திய மருந்து கட்டுப்பாட்டு ஆணைக்குழு அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில் சீரம் இந்தியா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அடார் பூனாவாலா, இன்னும் 6 மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். , தற்போது பரிசோதனையில் உள்ள இந்த தடுப்பூசி நல்ல செயல்திறன் கொண்டிருப்பதாகவும் அடர் பூனவல்லா தெரிவித்தார்.

## மேலும் இறக்குமதி...

முன்பக்கத் தொடர்ச்சி..

சமாளிக்க இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது . அந்நாடுகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்புவதாகவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டிற்கு வெளியில் இருப்பதால், பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரிமாளிகையில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதுடன், நாட்டில் நீண்டகாலமாக நிலவும் டொலர் தட்டுப்பாடு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது

டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி பெறுமாறு பல அமைச்சர்கள் பரிந்துரைத்துள்ளஅதேசமயம் சில அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினால் நிபந்தனைகளுக்கு அரசாங்கம் உடன்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர் .

## 13 ஐ...

முன்பக்கத் தொடர்ச்சி..

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

30 வருடங்களுக்கு மேலாக நடைமுறைப்படுத்த முடியாத 13ஆம் திருத்தத்தை சிலர் தமது எஜமான்களைத் திருப்திப் படுத்துவதாக ஏற்க முயல்கிறார்கள். இதன்மூலம் தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சி தீர்வை திணிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு தமிழ் மக்களிடம் இருந்து ஆதரவு பெருகி வரும் நிலையில் அதற்கு முன்னதாக ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களை கட்டுப்படுத்துவதற்கு கூட்டமைப்பினர் மற்றும் விக்னேஸ்வரன் அணியினர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்தியா 13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கும் நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் வந்த வெளியுறவுச் செயலாளரும் 13 தான் தமிழ் மக்களுக்கு தீர்வு சில மாற்றங்களை செய்யலாம் எனவும் கூறியிருந்தார்.

சம்பந்தனும் இந்தியா வலியுறுத்துகின்ற 13ஆவது திருத்தத்தை நாம் ஏற்றாக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளார்.

13ஆவது திருத்தத்தை தமிழ் தரப்புகள் சில ஆதரிப்பதன் மூலம் சீனாவை விட்டு வாருங்கள் நாட்டை ஒற்றையாட்சிக்குள் ஆளலாம் என்ற செய்தி சிங்கள மக்களுக்கு சொல்லப்படுகிறது எனவும் கஜேந்திரகுமார் கூறினார்.

தமிழர் தரப்பு இப்போதாவது சமஷ்டியை பற்றி பேசவேண்டும் ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என கூற வேண்டும்.

இலங்கை அரசாங்கம் ஒற்றையாட்சியை கொண்டு வந்தால் எதிர்ப்போம் என கூறுவோர் 13 மூலம் இந்தியா கொண்டுவரும் ஒற்றை ஆட்சியை ஆதரிக்கிறார்கள். இத்தகையோர் பச்சைத் துரோகிகள்.

மக்கள் துரோகிகள் தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும் அவர்களை அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றாவிட்டால் அதன் பிரதி பலன்களை மக்களே அனுபவித்துக் கொள்ள வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்

மேலும் விக்னேஸ்வரனுக்கு இன்னும் அரசியல் அனுபவம் போதாது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்

13ஆவது திருத்தத்தை வலியுறுத்தும் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஏற்கனவே ஒற்றையாட்சியை ஏற்று செயற்படுபவர்கள் தான் தான் எனவும் அவா் குறிப்பிட்டார்

பதின்மூன்றாம் திருத்தம் தொடர்பில் இந்தியாவுக்கு அழுத்தத்தை கொடுப்போம் என கூடிய தமிழ் கட்சிகளில் கூட்டத்தில் விக்னேஸ்வரனும் பங்கெடுத்துள்ளார்.

அதன்பின் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது உண்மையை அவரே தன் வாயால் போட்டு உடைத்துவிட்டார். இலங்கையில் இந்தியாவுக்கு இருக்கும் ஒரே பிடி 13ஆவது அரசியல் அமைப்புதான். அதனை நீக்குவதற்கு நாம் அனுமதிக்க முடியாது என அவரே வெளிப்படையாக கூறியிருந்தார்.

புதிய அரசியலமைப்பு வேண்டாம். இருக்கிற 13 ஐ பாதுகாப்போம் என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கிறார் என எமக்குத் தெளிவாக விளங்குகிறது.

மனோ கணேசன் மற்றும் ஹக்கீம் ஒற்றையாட்சியின் கீழ் செயற்படுபவர்கள் அவர்களின் அரசியல் வேறு வட, கிழக்கில் தமிழ் மக்களுடைய அரசியல் வேறு. அதை அவர்கள் தெளிவாக விளங்கி இருப்பார்கள் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஆனால் 13 ஐ வலியுறுத்தும் கூட்டத்தில் அவர்கள் பங்கேற்றமை எமக்குக் கவலை அளிக்கிறது.

நான் பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஒற்றை ஆட்சி தொடர்பில் தெளிவாக கூறியபோது மனோ கணேசன் என்னைப் பாராட்டினார்.

நாங்கள் தெற்கில் சிங்களவர்களோடு சேர்ந்து அரசியல் செய்கிறவர்கள்: இதைப்பற்றி பேச முடியாது. நீங்கள் தெளிவாகப் பேசியது நல்லது என்றார்.

அதேபோன்று ஹக்கீம் முஸ்லிம்களின் பெருந்தலைவர் அஸ்ரப்புக்கு பின்னர் ஆளுமை உள்ள தலைவராக செயற்பட்டு வருகிறார்.

ஒற்றை ஆட்சியினால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை உணர்ந்து அவா் செயற்படுவார் என நம்புகிறேன்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே சில சிக்கல்கள் இருக்கலாம். அதனை நாம் பேசித் தீர்க்கலாம் எனவும் அவா் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தம் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்வதற்கான சூழலை உருவாக்கும். இதனை தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகிறேன் எனவும் கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார்

## லிட்ரோ...

முன்பக்கத் தொடர்ச்சி..

செய்த ரிட் மனு நேற்றுசெவ்வாய்க்கிழமை (14) விசாரணைகெடுத்துக்கொள்ளப்பட்ட போது போது இந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் ருவன் பெர்னாண்டோ, சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எரிவாயு சிலிண்டரின் கலவை, அந்த கலவை சிலிண்டரில் தென்படும் சாத்தியக் கூறுகள் மற்றும் தற்போது சந்தைக்கு வெளிவிடப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதா என நீதிபதிகள் குழாம் இதன்போது பிரதிவாதிகளிடம் வினவினர்.

இதன்போது லிட்ரோ எரிவாயு நிறுவனம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசூரிய, இந்த விடயம் தொடர்பாக தனது கட்சிக்காரரிடம் கேட்டறிந்து சமர்ப்பணங்களை முன்வைக்கதானை ங் இன்றுசி வரைகால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றில் கோரியிருந்தார்.

இதன் பிரகாரம் , மனுமீதான விசாரணையை மீண்டும்இன்று எடுத்துக் கொள்வதற்கு மன்று உத்தரவிட்டது.

## சர்வதேச...

முன்பக்கத் தொடர்ச்சி..

அமைச்சர்கள் பலரும் கருத்து தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பில் அவர்களிடையே நீண்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்வேளையில், தற்போதைய நிலைமையில் இறக்குமதிகளை மேலும் கட்டுப்படுத்த வேண்டியேற்பட்டுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதுடன், பொருட்களின் இறக்குமதியின் போது எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை டொலர் நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்காக இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் இதன்படி அந்த நாடுகளிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அண்மையில் தான் இந்தியாவுக்கு சென்று அங்கு நடத்திய கலந்துரையாடல்கள் தொடர்பிலும் பசில் ராஜபக்ஷ விளக்கியுள்ளார்.அத்துடன் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வேளையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதன் அவசியம் குறித்து அமைச்சர்கள் சிலர் கருத்துக்களை முன்வைத்துள்ள நிலையில், மேலும் சில அமைச்சர்கள் அவ்வாறு அதன் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் அதன் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டி வரும் என்றும் இதனால் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாது நட்பு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்வோம் என்றும் கூறியுள்ளனர்.

இவ்வாறான நிலைமையில் சர்வதேச நாணய நிதித்திற்கு செல்வதா? இல்லையா? என்பது குறித்து அமைச்சரவையினால் இறுதி முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

## சீன உரக்...

முன்பக்கத் தொடர்ச்சி..

அந்தக் கப்பலில் இருந்த உரத்தில் தீங்கு விளைவிக்கக் கூடிய பக்டீரியாக்கள் இருப்பதாக தெரிவித்து அந்த உரத்தை இலங்கை நிராகரித்ததுடன், தரமான உரத்துடன் வந்தால் ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் உரத்திற்கான கொடுப்பனவை வழங்க வேண்டுமென சீன நிறுவனம் கோரிய நிலையில், அதற்கு எதிராக இலங்கை அதிகாரிகளினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.எவ்வாறாயினும் தமக்கு உரிய நஷ்ட ஈட்டை வழங்க வேண்டும் என்று சீன உர நிறுவனம் கோரிக்கை விடுத்துடன், குறித்தக் கப்பல் இலங்கை கடல் எல்லையில் பல நாட்களாக தொடர்ந்தும் சுற்றிக்கொண்டிருந்தது.

இந்நிலையில் இரு தரப்பிற்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய குறித்த கப்பல் கடந்த 5 ஆம் திகதி மீண்டும் புறப்பட்டுச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில், இரு தரப்பினருக்கும் பாதிப்பு இல்லாதவாறு 6.% மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை வழங்குவதற்கு, அமைச்சரவை கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் நியமங்களுக்கு அமைவாக உரத்தை மீள் உற்பத்தி செய்யுமாறு குறித்த உர நிறுவனத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## இழப்புகளுக்கு...

முன்பக்கத் தொடர்ச்சி..

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படுகின்ற எரிவாயு கசிவின் காரணமாக பல்வேறு விபத்துச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எரிவாயுவினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு விபத்தின் மூலமான உயிரிழப்பு, உடற் காயங்கள் மற்றும் சேதங்களுக்கு காப்புறுதி தொகையினை பெற்றுக்கொள்ள முடியும்.

லிட்ரோஎரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தியதன் விளைவாக அல்லது சிலிண்டர் வெடிப்புகள் மற்றும் துணைக்கருவிகளால் அல்லது திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு உற்பத்திக் குறைபாட்டினால் ஏற்பட்ட மரணம், உடல் காயம் அல்லது சேதம் ஆகியவை நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே வாடிக்கையாளர்கள் இழப்பீடு கோர முடியும்.

லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு நிறுவனம் தவறுகளை அமைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் டிசம்பர் 4 ஆம் திகதிக்கு முன்பாக விநியோகிக்கப்பட்ட சீல் வைக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அனைத்து எரிவாயு சிலிண்டர்களையும் திரும்பப் பெறுமாறும் இரு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை லிட்ரோ நிறுவனத்தால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாயு தொடர்பிலும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. இலங்கைக்கு வாயுவினை இறக்குமதி செய்யப்பட்ட கப்பலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாயுக்களின் மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை தாமதமாவதால் எரிவாயுவினை இறக்குமதி செய்வது தாமதமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள எரிவாயுவானது உரிய தரத்தில் இல்லையென தகவல்கள் வெளியாகியுள்ளன. வாயுக் கலவைகளான புரப்பேன் மற்றும் பியூட்டேன் அகியவை உரிய தரத்தில் காணப்பட்டாலும் எரிவாயுவின் வாசனையை அறிவதற்கு உதவும் எதேய்ல் மெர்காப்டன் கலவையில் குறைபாடு காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை இறக்குமதி செய்யப்பட்டுள்ள எரிவாயு தரம் குறைந்தவையாக காணப்படுவது நிரூபிக்கப்பட்டால் கப்பல் திருப்பி அனுப்பப்படுமென நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் எதேய்ல் மெர்காப்டன் கலவையில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது. எரிவாயு கசிவினை கண்டறிய உதவும் எதேய்ல் மெர்காப்டன் 14 அலகுகளாக இருக்க வேண்டிய நிலையில் 5 அலகுகளே காணப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

## தரமற்ற...

முன்பக்கத் தொடர்ச்சி..

இன்னும் செயலில் உள்ள நிலையில், உர கேன்களுக்குள் எதிர்வினைகள் ஏற்படுகின்றன. நைட்ரஜனின் அதிகசெறிவு அல்லது உரத்தின் வலிமை பிரச்சினை அல்ல. ஆனால் உள்ளடக்கத்தின் தரமே பிரச்சினையாகும். குறைந்தளவு ஒட்சிசனை கொண்ட மூடிய கொள்கலன்களில் நுண்ணுயிரிகள் மிக வேகமாக வினைபுரிந்து பல்வேறு வாயுக்களை வெளியிடும். நாடு முழுவதுமுள்ள விவசாயிகளால் உரக் கேன்கள் வெடித்துச் சிதறுவதற்கு கேன்களின் உள் அழுத்தமே காரணம் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திரவ சேதன பசளை இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் நாட்டுக்கு ஒரு பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. சேதன பசளை அடங்கிய கேன்கள் வெடிப்பது, கசிவு மற்றும் கேன்களின் மூடிகள் திறத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக விவசாயிகள் மற்றும் விவசாய சேவை நிலையங்களின் அதிகாரிகள் அச்சத்தில் உள்ளதாகவும் நனோ நைட்ரஜன் உரத்துக்குப் பதிலாக நனோ யூரியா உரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் சீனாவிலிருந்து சேதன பசளையினை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் சேதன பசளை மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் காணப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த பசளைக்கு தடை விதிக்கப்பட்டது.

சேதன பசளையை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட நிலையில் இந்தியாவிலிருந்து திரவ நனோ நைட்ரஜன் பசளையினை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் திரவ நைட்ரஜன் பசளை தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்த நிலையில் மீண்டும் இரசாயன உர இறக்குமதிக்கு கடந்த மாதம் முதல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

## கட்சி...

முன்பக்கத் தொடர்ச்சி..

தான் இவ்வாறான சிந்தனைகள் மேலோங்குகின்றன. யாழ் மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்ல. ஆனால் அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்கள் சிந்தனையை தகுந்த விதத்தில் உள் நாட்டவர்களிடமும் வெளிநாட்டவர்களிடமும் கொண்டு செல்லக் கூடியவர்.அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த நகர முதல்வரை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது. இந்தக் கால கட்டம் நெருக்கடி மிக்கது. அறிவு, ஆளுமை, கொண்டவர்களை நாங்கள் பதவி இழக்கச் செய்தோமானால் அரசாங்கத்தின் காவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய்விடும்.

எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால் அவரின் செயல்கள் பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப்படுத்தியுள்ளன. தயவு செய்து பதவியில் இருக்கும் நகரபிதா முதல்வரை கட்சிக் காரணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று சகல யாழ் மாநகர சபை உறுப்பினர்களிடமும் அன்பான கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றேன்.

# வடக்கு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தனி ஆங்கிலம்

## எதிர்த்து வெளியேறினார் சிறீதரன் எம்.பி.

வடக்கு மாகாண ஆளுநர்தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனி ஆங்கிலத்தில் கலந்துரையாடல்கள் நடைபெற்றதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டத்தைப் புறக்கணித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறீதரன் வெளியேறினார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வடக்கு மாகாண செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டம் தொடங்கியது முதலே கூட்டத்தில் பங்கேற்ற அரச அதிகாரிகளும், ஆளுநரும் தனியே ஆங்கிலத்திலேயே உரையாற்றியதுடன், கலந்துரையாடினர்.

இதன்போது வடக்கு மாகாணம் தமிழ் மக்கள் வாழும் மாகாணம். பணியாற்றும் அதிகாரிகளும் தமிழர்கள் என்பதால் தமிழ் மொழியில் உரையாற்றுமாறு சிறீதரன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

என்னும் அதனை எவரும் செவிமடுக்காத நிலையில் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக கூட்டத்தை புறக்கணிப்பதாக அறிவித்து சிறீதரன் வெளியேறினார்.

# ஜனாதிபதியின் ஆணைக்குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்

வவுனியா நிருபர்



ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லை எனத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திணிக்காதே திணிக்காதே ஆணைக்குழுக்களை திணிக்காதே, போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம்,

வேண்டாம் வேண்டாம் மரண சான்றிதழ் வேண்டாம், வேண்டாம் வேண்டாம் இழப்பீடும் வேண்டாம், வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பாதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்சங்க செயலாளர்சிவானந்தம் ஜெனிதா கருத்து தெரிவிக்கையில், இன்றைய தினம்(நேற்று ) கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை வவுனியா மாவட்ட செயலகத்தில் சந்திப்பதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் அந்த தகவலின்படி இதுவரை நேரமும் அவர்கள் வருகை தரவில்லை. எந்தவித ஆணைக்குழுக்களும் தேவையில்லை, உள்ளக விசாரணைகளும் தேவையில்லை சர்வதேச விசாரணையே தேவையென 12 வருடமாக போராடி கூறிக்கொண்டு வருகின்றோம்.

எத்தனையோ ஆணைக்குழுக்கள் வந்தும் பதிவுகளை மேற்கொண்டு செல்கிறார்களே தவிர எந்தவிதமான நீதியும் வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக அதே வேலையை தான் செய்கின்றார்கள். எங்களுக்கு நீதியே கிடைக்க வேண்டும், நீதிக்கு பின்பு தான் எது என்றாலும் சர்வதேச விசாரணையே வேண்டும் என்றார்.

# வீடு புகுந்து பெண்கள், சிறுவன் மீது ஊர்காவற்றுறை பொலிஸார் தாக்குதல்

## இரு பெண்கள் காயம்; மதுபோதையில் அட்டகாசம்

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு, தம்பாட்டி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் மது போதையில் நுழைந்த பொலிஸார், வீட்டில் இருந்த பெண்கள் மற்றும் 17 வயது மாணவன் ஒருவரை சரமாரியதாகத் தாக்கி பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் பாதிப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தாக்குதலில் ஒன்றரை வயதுக்குக் குழந்தையின் தாய், பல்கலைக்கழக மாணவி ஆகியோர் பலத்த காயமைடைந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் குறித்து வீடியோ, புகைப்படங்கள் உள்ளிட்ட ஆதாரங்களுடன் தாக்கப்பட்ட பெண்களின் தாயார் மற்றும் கிராம மக்கள் இணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

பொலிஸாரால் தாக்கப்பட்டு காயமடைந்த பெண்களின் தாயார் அளித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சனிக்கிழமை மாலை 6 மணியளவில் எனது வீட்டில் இருபெண்பிள்ளைகளுடன் நான் இருந்தேன். அப்போது 3 மோட்டார்சைக்கிள்களில் 6 பேர் வந்து எனது வீட்டை சுற்றிவளைத்தனர். எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. என்ன பிரச்சினை எனக் கேட்ட போது முதலில் குடும்ப அட்டையை எடுக்குமாறு அவர்கள் கூறினர்.

பின்னர் யாரோ ஒருவர் கடலில் இருந்து மோட்டர் ஒன்றைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டதாகத் தெரிவித்தனர். அதன்பின் சிறிது நேரத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றிலிருந்து ஒருவர்தப்பியோடிவிட்டதாகத் தெரிவித்தனர். அதன் பின்னரே தாங்கள் ஊர்காவற்றுறை பொலிஸார் என அவர்கள் கூறினர். அதன் பின்பே அவர்கள் பொலிஸார் என எங்களுக்குத் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது வீட்டுக்கு வந்த எனது மருமகன் எனது 17 வயது மகனை மேலாடை இன்றி கையில் விலங்கிட்டு பொலிஸார் வீதியில் வைத்திருப்பதாக கூறினார். நான் ஓடிச் சென்று எனது மகனை ஏன் விலங்கிட்டு வைத்திருக்கிறீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு எந்தப் பதிலும் கூறாத பொலிஸார், கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தி என்னையும் எனது பெண் பிள்ளைகளையும் திட்டினர். இதன்போது எனது மகன் மற்றும் அவரை ஏன் அடிக்கிறீர்கள் ? எனக் கேட்ட வேறு இருவரையும் பொலிஸார் சரமாரியாகத் தாக்கி வாகனத்தில் ஏற்றினர். பின்னர் வாகனத்துக்கு அருகில் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவியான எனது மகளை அடித்து, வீதியில் இழுத்து விழுத்தினர்.

எனது மற்றொரு மகளான ஒன்றரை வயதுக்கு குழந்தையின் தாயையும் பொலிஸார் கட்டையால் அடித்து வீதியில் விழுத்தினர். இதில் இருவரும் காயமடைந்தனர். காயமடைந்த இருவரையும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு நானும் எனது கணவரும் பொலிஸ் நிலையம் சென்று எனது மகனை ஏன் கைது செய்தீர்கள்? என்று கேட்டோம். அதற்கு என்னையும் என் கணவரையும் தகாத வார்த்தைகளால் திட்டினர். பின்னர் எனது ஏனைய இரண்டு மகன்களையும் பொலிஸ் நிலையம் அழைத்துவந்து ஒப்படைத்தால் மட்டுமே கைது செய்த மகனை விடுவிப்பதாக கூறினர். நாங்கள் செய்வதறியாது வீடு திரும்பிவிட்டோம்.

பின்னர் இரவு 11 மணியளவில் எனது மகன் மற்றும் இருவரை முகக் கவசம் அணியவில்லை என்ற குற்றச்சாட்டை பதிவு செய்து பிணையாளிகள் மூலம் விடுவித்தனர். சுமார் ஒரு மாதத்துக்கு முன்பும் ஊர்காவற்றுறை பொலிஸார் மாலை நேரம் வீட்டுக்கு வந்து என்னை அச்சுறுத்தினர். எனது வீட்டுக்கு வந்து தாக்குதல் நடத்திய பொலிஸார் அனைவரும் மதுபோதையில் இருந்தனர் .

# ஆட்டோ- மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

நெளுக்குளம் நிருபர்

வவுனியா குட்செட் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.45மணியளவில் முச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குட்செட் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி ஆட்டோ பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில் கருமாரி அம்மன் ஆலயத்தினை அண்மித்த நேரத்தில் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் ஆட்டோவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் இரு வாகனங்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகியதுடன் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

# பிரியந்த குமார கொலை; 52 பேருக்கு விளக்கமறியல் 900 சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

பாகிஸ்தானின் நகரில் பணிபுரிந்து வந்த இலங்கைப் பிரஜையான பிரியந்த குமார, கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 18 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் இதற்கு முன்னர் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய 34 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மொத்தமாக 52 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றத்தினால், இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன், குறித்த சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, இந்த கொலை சம்பவத்தில், 900சந்தேகநபர்களுக்கு எதிராக பாகிஸ்தான் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தீவிரவாதம், கொலை முயற்சி மற்றும் கொலை செய்வதற்கான சதித் திட்டம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


## அறிவித்தல்

புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட், (REG.NO.PV7139)
மற்றும் புனிபெமெஸ்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், (REG. NO. PV15252)
ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின், கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, இல. 107, ஹாஜுப்பிட்டிய லேக் ரோட், கொழும்பு 02 என்ற முகவரியில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள புனிபெமெஸ்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, இல. 107, ஹாஜுப்பிட்டிய லேக் ரோட், கொழும்பு 02 என்ற முகவரியில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துடன் ஒன்றிணைகிறது என்பதை இத்தால் அறிவித்திருக்கிறது.

புனிபெமெஸ்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனமானது, புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட ஒரு இணை நிறுவனமாகும். இந்த ஒன்றிணைப்பின் காரணமாக, புனிபெமெஸ்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் சொத்துக்கள் யாவும் புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்திற்கு சென்றடைகிறது.

இந்த ஒன்றிணைப்பை, புனிபெமெஸ்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் மற்றும் புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் என்பனவற்றின் பணிப்பாளர் சபை, கம்பனிகள் சட்டத்தின் 242(1) என்ற சரத்தின் கீழ் அங்கீகரித்துள்ளன. குறித்துரைக்கப்பட்ட ஒன்றிணைப்பின் பின்னர் புனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் செயற்பாட்டிலுள்ள ஒரு நிறுவனமாக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கு அமைய
பிஸ்னஸ்லேட் (பிரைவேட்) லிமிட்டெட்
இல.45, பிரேபுருக் வீதி, கொழும்பு 02 - செயலாளர்கள்
2021-12-15



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
daily@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
புதன்கிழமை 15 டிசம்பர் 2021 Wednesday 15th December 2021

## இன, மத சமூகங்கள் மத்தியிலான உறவை மேலும் சிக்கலாக்கக்கூடாது

சமத்துவத்துடன் வாழ்வதற்கான உரிமையானது ஏனைய சகல உரிமைகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. மனிதகுலம் கௌரவம், மரியாதையுடன் கூடிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கு சமத்துவமே அடித்தளமாகும்.நாடொன்றின் சகல பிரஜைகளும் சமமான அளவில் உரிமையை கொண்டிருப்பதை பாதுகாக்க பொருத்தமானதும் போதுமானதுமான நடவடிக்கைகளை அரசாங்கமே எடுக்க வேண்டும்.நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குழுவொன்று 'இருக்கும் உரிமைகள் பறிக்கப்படாமல்' இருப்பதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.1987 இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை, கொழும்பில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முழுமையாக அமுல்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. காணி, பொலிஸ் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் மீதான அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கு தொடர்ந்து மறுத்து வருகின்றமையால், இலங்கையின் அரசியலமைப்பில் சுமார் நான்கு தசாப்தங்களாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இந்தத் திருத்தம் இருந்துவருவதுடன் அதனை முழுமையாக கைவிட்டு விடுவதற்கு முனைப்புகள் தீவிரமாக இடம்பெறுவதாக சந்தேகிக்கப்படும் நிலையிலேயே தமிழ் பேசும் அரசியல் சமூகத்தின் ஒரு தரப்பிலிருந்து இந்த அழைப்பு வெளிவந்துள்ளது.

13 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்று தற்போதைய அரசாங்கத்திலுள்ள சிலர் கூமையாக குரலெழுப்பி வருகின்றனர். ஆனால் 13 ஆவது திருத்தம் மட்டுமே இதுவரை வடகிழக்கில் பெரும்பான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வுக்கான ஒரேயொரு சட்டரீதியான உத்தரவாதமாக இருந்துவருகிறது.அதேசமயம் தென்னிலங்கையில் சிங்கள மக்களில் பலர் இந்த முறைமையினை 'அதிகம்' என்று கருதுகின்றனர்,ஆனால் தமிழ் அரசியல் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் மாகாண சபைகளுக்கான அதிகாரம் 'மிகக் குறைவு' என்று கருதுவதுடன் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அரசியல் அபிலாசைகளுக்கான நியாயபூர்வமான தீர்வை சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி முறைமையின் ஊடாக மட்டுமே அடைந்துகொள்ள முடியுமென்று திட்டவட்டமாக வலியுறுத்தி வருகின்றனர். அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கைத் தலைமைத்துவங்களிடம் இந்தியா பலமுறை கோரிக்கை விடுத்துள்ளது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதற்காக, சட்டத்திற்கு அப்பால் செல்வது தொடர்பாக கொழும்பு உறுதிமொழிகளை பலதடவை வழங்கியிருந்தாலும், 'இதுவரை அது நடக்கவில்லை' என்று சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா .சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வதற்கான உரிமை மற்றும் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தோருக்கு எந்தவொரு சட்ட நடவடிக்கைகளிலிருந்தும் தண்டனையிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுதல் போன்ற கசப்பான அனுபவங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான பாரபட்சங்களை மேலும் வலுப்படுத்துவதுடன் மனித உரிமை மீறல்களை நிறுவனமயமாக்கியுள்ளது.இந்நிலையில் தற்போதைய ஒற்றையாட்சி முறைமையில் நியாயபூர்வமான தீர்வை எட்டமுடியாதெனவும் அதனால் சமஷ்டி முறைமையிலான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் தமிழ்த் தரப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் வாழ்வுரிமை உட்பட அடிப்படை உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தமிழ் பேசும் மக்களில் கணிசமானோர் பெரிதும் சிரமப்படுகின்றனர் . வாழ்வதற்கான சுதந்திரம், சமத்துவம், பேச்சு சுதந்திரம் , அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், சுதந்திரமாக நடமாடுதல், எந்தத் தொழிலையும் செய்வதற்கான சுதந்திரம் தன்னிச்சையான கைதுகளுக்கு எதிரான பாதுகாப்பு போன்ற விடயங்கள் அனைவருக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கின்றபோதிலும் அனைவரும் சமத்துவமான முறையில் நடத்தப்படுகிறார்களெனக் கூறமுடியாது.

ஒன்பது மாகாண சபைகளும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலாவதியான பின்னர் இரண்டு வருடங்களாக செயலிழந்துள்ளன. அதேவேளை, பல்வேறு ஜனாதிபதி செயலணிகள் மூலம் அரசாங்கம் சிறுபான்மை சமூகங்களின் அதிகாரங்களை பறிக்க முயற்சிப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் 13 ஆவது திருத்தத்தை ஒரு நிரந்தரத் தீர்வாக தாங்கள் பார்க்கவில்லை என்றாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை, இடைக்காலத் தீர்வாக அதனை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தலும் விடுக்கப்பட்டிருக்கிறது.ஏற்கனவே கடினமான மற்றும் சிக்கலான இன, மத சமூகங்கள் மத்தியிலான உறவை மேலும் சிக்கலாக்காமலும் ஜனநாயகத் தன்மையை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தாமலும் கருத்தொருமைப்பாட்டுடன் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால துன்பங்களுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதே நியாயபூர்வமாக சிந்திப்போரின் எதிர்பார்ப்பும் வலியுறுத்தலாகவும் காணப்படுகிறது.

# 'மக்கள் அரசியலமைப்பு' புதிதாகவும் வேறுபட்டதாகவும் சிந்திக்க வேண்டியது அவசியம்



பசில் பெர்னாண்டோ

**1978 அரசியலமைப்பின் கீழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். துன்பங்கள்தான் வரலாற்றின் மிகப் பெரிய ஆசான். இப்போது, மக்கள் இதுபோன்ற மோசமான அனுபவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான வழிகளை உருவாக்கும் நோக்கத்துடன் தங்களின் சொந்த கசப்பான அனுபவங்களைப் பற்றி சிந்திக்கலாம்**

இரகசியமானதும் நேர்மையற்றதுமான முறைகளுக்கு எதிராக அதிகளவுக்கு பங்கேற்பு செயல்முறையின் மூலம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவது குறித்த கலந்துரையாடல் இப்போது நடைபெற்று வருகிறது. கலந்துரையாடப்படும் சில கேள்விகளுக்கு பதிலான சில யோசனைகள் இவை.

1978 அரசியலமைப்பின் பிரச்சினையை கையாள்வதில், அரசியலமைப்பு தொடர்பான பல அடிப்படைக் கருத்துகள் பொய்யாக்கப்படுவதை நாம் உண்மையில் எதிர்கொள்கிறோம். இந்த பொய்மைப்படுத்தல்களின் நோக்கம், அது அடைய விரும்பும் நோக்கங்களின் அடிப்படையில் இயற்கையில் மிகவும் கசப்பான ஒரு ஆவணத்திற்கு ஜனநாயகரீதியான சட்டபூர்வமான தன்மை மற்றும் ஜனநாயகரீதியாக சட்டபூர்வமானதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதாகும். ஜனநாயகத்தை முற்றிலுமாக இடம்பெயரச் செய்வதே இதன் அடிப்படையம்சமாகும்.

அந்தமாதிரியான தன்மையில் ஒரு சிக்கலைக் கையாள்வதில், வழமையான விதத்தில் சிந்திப்பது இந்த சூழ்நிலையிலிருந்து எப்படி வெளியேறுவது என்பதற்கான எந்தவொரு குறிகாட்டிகளையும் எமக்கு வழங்கப்போவதில்லை. நாம் எமது அரசியலமைப்புச் சட்டம் என்று அழைக்கும் ஆவணத்தின் அப்பட்டமான முரட்டுத்தனத்தை முதலில் அம்பலப்படுத்துவதும்,வழமைக்கு மாறாக புதிதாக சிந்திப்பது முக்கியம்.

முற்றிலும் நூட்ப ரீதியான மற்றும் சட்டபூர்வமான விதிமுறைகளை நாம் நினைக்கும் போது, 1978 அரசியலமைப்பின் அதே கட்டமைப்பிற்குள் நாம் சிக்கிக் கொள்கிறோம், ஆனால் அந்த அரசியலமைப்பின் முடிவை நாம் காண வேண்டுமானால், நாம் செய்யாமல் இருப்பது கட்டாயமாகும். 1978 அரசியலமைப்பை இரத்துச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் அந்த அரசியலமைப்புச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட வழியே வழிமுறையாகவுள்ளது என்பதுதான் பல வழக்கறிஞர்கள் சிக்கிக்கொண்ட ஒரு பிரச்சினை. ஒரே வழிமுறையில் மட்டும் சிந்தித்தால், வேறு வழியில்லை. எனவே,ஆரம்பத்திலேயே ஒருவழியில் சிந்தித்தால் 1978 அரசியலமைப்பை முற்றிலுமாக நிராகரிக்கும் போரில் நாம் தோற்றுவிடுவோம்.

நாம் கையாள்வது வெறும் ஏமாற்றுவாதமல்ல . இலங்கையின் சமூக, பொருளாதார, சட்ட மற்றும் கலாசார வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் முழு தேசத்தையும் ஆபத்தில் ஆழ்த்தியிருக்கும் மிகவும் நடைமுறையிலுள்ள பிரச்சினையை நாங்கள் கையாள்கிறோம். பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடி, சட்டம் ஒழுங்கு நெருக்கடி என மிக மோசமான நிலையை அடைந்துள்ள நாடு கடந்த காலங்களில் அனுபவித்ததை விட பலமடங்கு பெரிதாக்கப்பட்டுள்ள சூழலை நாம் கையாள்கின்றோம்.

இது தர்க்கம் அல்லது சட்டத்தின் பிரச்சினை அல்ல. இது மக்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பற்றியது. பலருக்கு அது உயிர்வாழ்வதற்கான விடயமாகிவிட்டது. இன்னும் பலருக்கு இலங்கையில் இருக்கப் போகிறார்களா இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது. இவ்வாறாக, அரசியலமைப்பு உருவாக்கம் இந்த நிலைமைக்குக் காரணமான அடிப்படை உண்மைகளைத் தீர்க்கும் முயற்சியின் ஒரு பகுதி மட்டுமே. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு, நாட்டில் இந்த நிலைமையை ஏற்படுத்தியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

இந்த மோசமான நிலைக்கு ஒரு காரணம் 1978 அரசியலமைப்புச் சட்டமே என்பதுதான் எமது தொடக்கப் புள்ளி. மக்கள் எதிர்நோக்கும் இந்த அடிப்படையான கள மட்டத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமானால் அது அகற்றப்பட வேண்டும்.

அது மட்டுமே தீர்வாக இருக்கும் என்று நாங்கள் கூறவில்லை. 1978 அரசியலமைப்பை அகற்றாமல், நாம் மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேறு எந்தவொரு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் அடைய முடியாது என்று மட்டுமே நாங்கள் கூறுகிறோம்.

மேற்கூறிய கருத்துக்கள், கடந்த காலத்தில் மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமாக இருந்த பிரச்சினைகளில் இன்று மக்கள் ஈடுபடுவார்கள் என்பதாகும். அனைத்து கண்டுபிடிப்புகளுக்கும் அடிப்படையாக தேவைப்பாடே உள்ளது. மேற்கூறிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு அடிப்படை, சட்ட கட்டமைப்பை வழங்கக்கூடிய அரசியலமைப்பின் புதிய கண்டுபிடிப்பு இன்று ஒரு விருப்பமல்ல, ஆனால் அவசியமானது.

எனவே, இவ்வாறான சூழ்நிலையில், மக்கள் ஈடுபட்டவுடன், அவர்கள் உயிர்வாழ விரும்பினால், அவர்களால் தப்பிக்க முடியாத சில அடிப்படைப் பிரச்சினைகளைச் சமாளிக்க நாட்டின் மேதைகளை நாங்கள் அழைக்கிறோம் என்பதே இதன் அர்த்தமாகும். இந்த மாதிரியான பிரச்சினைகளை பரிசீலிப்பதற்காக இந்த மேதையை கொண்டுவந்தால், 1978 அரசியலமைப்பின் எல்லைகள் போன்ற முற்றிலும் கருத்துருவாக்க சிக்கல்களைத் தவிர்ப்பதற்கான வழிகளை மக்கள் உருவாக்க முடியும். அதை மாற்றினால், மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் முக்கியமான மாற்றங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டில் சில கருத்துருவாக்கங்களை கண்டறியலாம் அல்லது சில கருத்துவடிவங்கள் முற்றிலும் முக்கணிக்கப்படலாம்.

நிறவெறிக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கிய தென்னாபிரிக்க அரசியலமைப்பை நீக்கிவிட்டு, அந்த அரசியலமைப்பிற்கு அடிப்படையில் எதிரான கருத்துக்களை கொண்டுவருவதை முன்கூட்டியே சிந்திக்க முடியவில்லை. நிறவெறியை அகற்றுவதற்கு முன்பே சட்ட சூத்திரங்கள் உள்ளன. இருப்பினும், இயக்கம் முன்னேறும்போது, நியாயமான தீர்வைத் தவிர்ப்பதன் விளைவுகள் இந்த இயக்கத்தின் எதிர்ப்பாளர்களால் கூட எதிர்கொள்ளப்படும் போது, இதன் காரணத்தின் பகுத்தறிவும் நியாயமும் வெளிப்பட்டது . அந்த மாதிரியான வரலாற்றுச் சிக்கலான சூழ்நிலைக்கு மத்தியில் சட்ட நோக்கங்களுக்காகத் தேவையான பல்வேறு சூத்திரங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விட மிகப் பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்ட நாடுகளில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வழிமுறையாக, அரசியலமைப்பு பேரவைகள் உருவாக்கப்பட்ட பல சூழ்நிலைகள் தொடர்பாகவும் இதையே கூறலாம்.

உதாரணமாக, இந்தியாவில், 1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி, அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியபோது, அந்தச் சட்டத்தில் அரசியலமைப்புச் சபைக்கான எந்த ஏற்பாடும் இல்லை. இருப்பினும், சிறந்த அரசியலமைப்புகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பது பற்றி மக்களுக்குத் தெரியும் என்பதை முன்னணி இந்தியர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் அரசியலமைப்பு சபையை உருவாக்கினர், இது ஆட்சி அமைப்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பது குறித்த தேசிய உரையாடலை உருவாக்கியது. அத்துடன் ஜனநாயகத்திற்கான உறுதியான அடித்தளத்தை வழங்கும் ஒரு அடிப்படை கட்டமைப்புடன் அவர்களுக்கான சொந்த அரசியலமைப்பை உருவாக்கியது.

சிலியில் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தில் பிரச்சினை நீடித்ததாக இருந்துவருகிறது. அந்த நாட்டில் நிலவிய இராணுவ பாணியிலான ஆட்சியை வீழ்த்தி, ஜனநாயக வழியிலான ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு ஒரு நடவடிக்கையாக அல்லாமல் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மக்களின் தீவிரமான பங்கேற்புடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான கலந்துரையாடல்களை இந்தக் கட்டத்தில், பின்வரும் காரணிகள் முக்கியமானவை:

தற்போதுள்ள அரசியலமைப்பு முற்றாக நீக்கப்படுவதுடன் அது சட்ட ஆவணமாக தயாரிக்கப்பட்ட மிகவும் துரதிர்ஷ்டவசமான ஆவணங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். உண்மையில் இலங்கை வரலாற்றில்,சிலசமயம் முழு உலகிலுமான ஒரு அரசியலமைப்பாகும்.

அதே மாதிரியை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு அரசியலமைப்பும் இலங்கையின் அரசியலமைப்பாக அங்கீகரிக்கப்படக்கூடாது. இந்த இரண்டு விடயங்களிலும் ஒருமித்த கருத்து உள்ளது. இதுவரை அது அவ்வளவுக்கு வலுவாக வெளிப்படுத்தப்படாமல் இருக்கலாம். இருப்பினும், செயல்முறை தொடங்கும் போது அதை தீவிரமாகப் பின்பற்றினால் அந்த தன்மை வெளிப்படும். மேதைகளை மேற்புறத்திற்கு வருமாறு அழைப்பதாக அதுவே முன்னர் அர்த்தப்படுத்தப்பட்டது. இன்று, நாடு 1931 இல் இருந்த இலங்கையிலிருந்து மிகவும் வேறுபட்டது. பல ஆண்டுகளாக, மக்கள் மாறிவிட்டனர். மிகவும் நுட்பமான மக்கள் தொகை இப்போது உள்ளது. அந்த மக்கள்தொகையில், பல அடுக்குகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிரச்சினைகளை மிகத் தெளிவாகவும் மிக வலுவாகவும் வெளிப்படுத்தக்கூடியவர்கள். சமீபத்திய மாதங்களில், சில முக்கியமான பிரச்சினைகள் எழுந்தபோது, அரசாங்கத்தின் சில செயல்களை அவர்கள் ஏன் நிராகரிக்கிறார்கள் என்பதற்கான காரணங்களை வெளிப்படுத்தும் வகையில், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் உடல் ரீதியாக மட்டுமல்ல, அறிவுபூர்வமாகவும் தலையிடும் திறனை நாங்கள் கண்டோம். எனவே, அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்தில் கணிசமான அளவுக்கு அதிநவீன விவாதத்திற்கான ஆற்றல் கிடைக்கிறது.

1978 அரசியலமைப்பின் கீழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். துன்பங்கள் தான் வரலாற்றின் மிகப் பெரிய ஆசான். இப்போது, மக்கள் இதுபோன்ற மோசமான அனுபவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான வழிகளை உருவாக்கும் நோக்கத்துடன் தங்களின் சொந்த கசப்பான அனுபவங்களைப் பற்றி சிந்திக்கலாம் .

சமூகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் இந்த வாய்ப்பை வழங்குவதே இந்த நேரத்தில் தேவை. ஆண்களுக்கும் பெண்களுக்கும், பழமைவாத அல்லது தீவிரவாதத்தின் மாறுபட்ட அளவிலான அனைத்து சமூகங்களுக்கும், பழைய அரசியலமைப்பின் கருமூலத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவிற்கும் எடுத்துக்காட்டாக, குறுக்கீடுகள் மற்றும் ஊழல் நடைமுறைகளின் சூழலில் பகுத்தறிவு முறையில் தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்த முடியாத தொழில்முனைவோர், வங்கிகள் மற்றும் குறிப்பாக மத்திய வங்கி மற்றும் பொருட்படுத்தல் பெறுமுறைகள் போன்ற ஏனைய அலுவல்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் தங்கள் தொழில்முறை அறிவைப் பயன்படுத்துவதில் இருந்து தடுக்கப்படுகிறார்கள்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுகள், புலனாய்வுப் பிரிவுகள் போன்ற சட்ட அமுலாக்கப்பிரிவுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட அனைவரும் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள்.அவர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவ கோட்பாடுகளுக்கு அமைய செயற்படாதிருப்பதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மீனவர்கள் மற்றும் குறிப்பாக, அரசாங்கத்துறையில் உள்ளவர்கள், அனைமுற்றோர் போன்ற பிற்படுத்தப்பட்ட ஆட்கள் உட்பட அனைத்து வகையான உழைக்கும் மக்கள் நெருக்குவாரத்திற்குள்ளாவது அபத்தமானது.

தாங்கள் கட்டமைக்கும் புதிய அரசியலமைப்பு,நியாயபூர்வமான மற்றும் நிலையான சமூகத்தில் வாழ்வதற்கான பெரும் நன்மைகளை வழங்குவதாக இந்த மக்கள் அனைவரும் உணர்ந்தால், சிறுபான்மையினர் பிரச்சினை போன்ற கடந்த காலங்களில் மிகவும் கடினமான பிரச்சினைகளில் கூட பல சமரசங்களைச் செய்ய அவர்கள் தயாராக இருப்பார்கள். எந்தவொரு துறையின் மீதும் முழுமையான எதிர்மறையான தன்மையுடன் கலந்துரையாடலைத் தொடங்குவது , அவை எவ்வளவு பழமைவாதமாக இருந்தாலும், போரில் ஆரம்பத்திலேயே தோற்றுப் போவதாகும். எந்தவொரு பிரச்சினையையும் அமைதியான முறையில் தீர்க்கக்கூடிய பகுத்தறிவுடனான உரையாடலின் வடிவமாக அரசியலமைப்பைக் காண வேண்டும். இது நியாயமற்ற போட்டியைப் பற்றிய பல அச்சங்களை நீக்கும். சிலர் மற்றவர்களுக்கு எதிராக சில சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாங்கள் இப்போது அத்தகைய கட்டத்தில் இருக்கிறோம். நாம் எழுத்துமூல அல்லது பேச்சுமூல தொடர்பாடல் செயல்முறையைத் தொடங்க வேண்டும். குறிப்பிட்ட சில நுட்பரீதியான பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது இந்த எழுத்துமூல அல்லது பேச்சு மூல தொடர்பாடல் திருப்பத்தை எடுக்கும் விதத்தில் விடப்பட வேண்டும்.

**கொழும்பு டெலிகிராப்**



# 13 ஐ ஏற்க மாட்டோம் என்று சாணக்கியர்கள் கூறுவது யாருடைய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள்பட்டம் வழங்கிக்கொள்பவர்கள் அதற்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்களுக்கு தமிழர்களின் இன்றைய யதார்த்தநிலை புரியவேண்டுமென்பதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் குறித்தும் தெளிவு வேண்டும் என்றும் தனது அறிக்கையின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1987 ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதுவே இப்பொழுது அனைவராலும் பேசப்படும் 13 ஆவது திருத்தமாகும். பதின்மூன்றாவது திருத்தம் வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாகாணமாகவும் ஏனைய ஏழு மாகாணங்களை உள்ளடக்கி எட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக டில்லியில் தமிழ்த் தரப்புகளுடனான பேச்சுவார்த்தையில் வடக்கு-கிழக்கு என்பது எப்போதும் இணைந்திருக்கும் என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேயே தமிழர் தரப்புகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன.

பின்னர், பதின்மூன்றாவது திருத்தத்தைக் கொண்டுவந்தபொழுது இந்தியாவுடனோ தமிழர் தரப்புகளுடனோ சரியான பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தான் விரும்பியவாறு அரைகுறை அதிகாரப்பரவலாக்கலுடன் தமக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தி அந்தத் திருத்தத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினார்.

அப்பொழுது வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை உருவாக்கிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதின்மூன்றாவது திருத்தத்தில் இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஓர் ஆவணத்தைத் தயார்செய்து அன்றைய ஜனாதிபதி பிரேமதாச, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோருக்கு அனுப்பிவைத்தனர். அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் பதின்மூன்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆகவே, பதின்மூன்றாவது திருத்தம் என்பது முழுமையான அதிகாரப்பகிர்வு அல்ல என்பதை தமிழர் தரப்பு அன்றே ஏற்றுக்கொண்டது. ஆனால் அது ஒன்று மாத்திரம்தான் தமிழ் மக்களுக்குக்கிடைத்த சட்டபூர்வமான, அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களாக இருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தும்படிதான் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.



1950களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகிய பொழுது, தந்தை செல்வா தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். 1976 ஆம் ஆண்டுவரையில், அவரது சமஷ்டி கோரிக்கையில் எத்தகைய முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. தந்தை செல்வாவிற்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரசதரப்பால் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாக பிரித்தானியரிடம் தமிழர்கள் இழந்த இறையாண்மையை மீளப்பெறுவதற்கான தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.ஆனால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எத்தகைய பொறிமுறைகளோ, திட்டங்களோ, மூலோபாய, தந்திரோபாயங்களோ அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம் பெற்று, தமிழின விடுதலைக்காக போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக்கொண்டும் தவறான கருத்துகளையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர். 'பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுவதாகவும் மகிந்த ராஜபக்ஷவே பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலே சென்று இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறியதாகவும் ஆனால் அவற்றையெல்லாம் மறந்துபோன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்பொழுது கோரிக்கைகளை முன்வைப்பது என்பது தமிழருக்குச் செய்யும் துரோகம்' என்றும் இந்த சாணக்கியர்கள் அண்மையில் சுன்னாகத்தில் நடந்த சாணக்கியர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் கூறியுள்ளனர். இதே விடயத்தை இவர்கள் இலண்டனிலும் தெரிவித்திருந்தனர். மாகாண சபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு அதன் பிறகு சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை. ஆனால் அரசாங்கம் அதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது.

இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் பதின்மூன்றை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது.

இந்த சாணக்கியர்களின் சாணக்கியத்தை சற்றே திரும்பிப் பார்ப்போம்.

2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்தவுடன் அவசர அவசரமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளை சூட்டோடு சூடாக பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்கள் அனுபவித்த கொடுமைகளை நேரடியாகவே கேட்டறிந்ததுடன், இது குறித்து ஐ.நா.விற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் கொடுப்பதற்காக விரிவான அறிக்கை ஒன்றையும் தயார் செய்திருந்தனர். இதனைக் கையளிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு ஐ.நா.விற்குச் செல்லுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று கூட்டமைப்பின் பேச்சாளராகவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமுமாக இருந்த நான் இலங்கைக்கு வெளியில் இருந்த நேரத்தில் அமெரிக்கா ஜெனிவாவிற்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தமது பயணத்தை ஒத்திவைத்ததாக தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் தன்னிச்சையாக அறிவித்தார். ஆயினும் அதனை ஏற்க மறுத்து நாம் ஜெனிவா சென்று பல நாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து மக்களின் நிலை பற்றி தெளிவுபடுத்தினோம்.

2015 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாகத் திகழ்ந்த ரணில் - மைத்திரி கூட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றும் பொருட்டு, ஐ.நா.வால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட காத்திரமான தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டவர்கள் இந்த சாணக்கியர்கள். இதற்கு இவர்கள் சொன்ன காரணம் விசித்திரமானது. சர்வதேச விசாரணை ஏற்கனவே முடிந்துவிட்டது. இனி அதனை அடுத்தகட்டத்திற்கு நகர்த்த வேண்டியதுதான் வேலை. எனவே நாம் பொறுமையுடன் இருந்து அதற்கான காரியம் ஆற்ற வேண்டும் என்று கூறியதுடன், சர்வதேச விசாரணையில் உள்ளூர் நபர்களும் இருப்பார்கள். அதேபோன்று உள்ளக விசாரணைகளிலும் சர்வதேசத்தவர்களும் இருப்பார்கள் என்று வியாக்கியானம் அளித்தவர்கள். 2015 ஆம் ஆண்டின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டாண்டுகள் அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு, பின்னர் மீண்டும் 2017 இல் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் கால அவகாசம் வழங்க வேண்டும். அதன்மூலம் தான் நாம் அதனை சர்வதேசத்தின் பிடியில் வைத்திருக்க முடியும் என்று சொல்லி மீண்டும் கால நீட்டிப்பைப் பெற்றுக்கொடுத்தவர்கள்.

2018 ஆம் ஆண்டில் அடுத்த சில மாதங்களில் புதிய அரசியல் யாப்பு வரப்போகின்றது. அதில் ஈழம் என்ற சொல்லைத் தவிர ஏனைய அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று கூறியதுடன், இந்த நேரத்தில் காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது என்று சொல்லி அன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றியவர்கள். அன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பின் நகலை அனைவரும் அறிவோம். இதற்கு சமஷ்டிக்குள்ளும் ஒற்றையாட்சி அடங்கியிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்ளும் சமஷ்டி ஒளிந்திருக்கிறது என்று வியாக்கியானம் கூறியவர்கள்தான் இன்று தமிழ்த் தலைமைகளை விமர்சிக்கின்றனர்.

புதிய அரசியல் சாசன வரைபு தொடர்பில் நாம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், வடக்கு-கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே நாங்கள் அதுபற்றி பேசவில்லை என்றும் வடக்கு-கிழக்கை மதச்சார்பற்ற பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று கோரினால் சிங்கள பௌத்த மக்களின் எதிர்ப்பைச்சந்திக்க நேரிடும். ஆகவே அந்த விடயங்கள் தொடர்பாக பேசவில்லை என்றும் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பதில் சொல்லப்பட்டது.

யுத்தத்திற்குப் பிற்பாடு வந்த முதலாவது பாராளுமன்றத்தில், மகிந்த ராஜபக்ஷ அரசுடன் பதினெட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். இந்தக் கூட்டங்கள் தோல்வியிலேயே முடிந்தன. ரணில்-மைத்திரி ஆட்சியில் பங்காளியாக இருந்துகொண்டு ஒவ்வொரு வருடமும் புதிய அரசியல் சாசனம் வருமென்றும் பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு என்று உறுதிமொழி வழங்கி வந்தீர்கள். ஆனால் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்தது. இப்பொழுது கோதாபய அரசுடனும் பேசுவதற்கு முயற்சிக்கின்றீர்கள். ஆனால் சிங்கள பௌத்த தீவிரவாத எண்ணங்களைக் கொண்ட கோதாபய அரசு அதற்கான நேரத்தை இன்னமும் உங்களுக்கு ஒதுக்கவில்லை. ஆனாலும் அவர்களுடன் கூட நீங்கள் பேசுவதற்குத் தயாராகத்தான் இருக்கின்றீர்கள். இப்பொழுது இறுதியாக நீங்கள் அமெரிக்கா, கனடா, இலண்டன் போய்வந்து '2022 இல் மாற்றங்கள் நிகழலாம்...ம்...ம்' என்று கயிறு திரிக்கிறீர்கள். இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதற்குப் பின்னர் நடந்த யுத்தத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்காத நீங்களே இப்பொழுது அவர்களைத் துணைக்கு அழைக்கிறீர்கள். ஒரு இலட்சம்பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லும் நீங்கள் ஒரு இனவழிப்பு நடந்ததாகச் சொல்ல முடியாதென்றும் சொல்கிறீர்கள். இந்த சாணக்கியர்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவை மேவி வேறு எந்தவொரு நாடும் தலையிடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வரவிருக்கின்ற புதிய அரசியல் சாசனத்தில் பதின்மூன்றை முற்றாகவே நீக்கப்படலாம் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. ஆகவே எமக்குக் கிடைத்த அதிகாரங்களை விட்டுக்கொடுப்பது என்ற முட்டாள்தனத்தை நாங்கள் செய்ய இயலாது. செய்யக்கூடாது.

கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அடுத்தகட்டத்திற்கு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இதுவரை காலமும் கூறி, மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த இந்த சாணக்கியர்கள், இப்பொழுது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்களது சுயமுரணைக் காட்டுகிறது. இவர்களின் செயற்பாடுகள் இவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலையும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனாவாதிகளின் நிகழ்ச்சிநிரலையும் முன்னெடுத்துச் செல்லும் நரகர்களாகவே முன்னிலைப்படுத்தியிருக்கிறது. எனவே எமது மக்கள் இத்தகைய அரசியல் நரகர்களிடம் விழிப்புடன் செயற்பட்டு எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

# மலேசியாவில் அடித்துக்கொல்லப்பட்ட எனது கணவனுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்

## நான் ஏழை என்பதால் எவருமே குரல் கொடுக்கவில்லை என்கிறார் மனைவி

மட்டிருப்பு நிருபர்

கடந்த ஆண்டு மலேசியாவில் அடித்துக்கொல்லப்பட்ட தனது கணவனுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

06-09-2020 ஆம் திகதி மலேசியாவில் கணபதிப்பிள்ளை விவேகானந்தன் என்னும் குடும்பஸ்தர் அந்த நாட்டவர்களினால் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் இது தொடர்பில் இதுவரையில் தனக்கு எந்த நீதியும் பெற்றுக்கொடுக்கப்படவில்லையென படுகொலை செய்யப்பட்டவரின் மனைவியான திருமதி பிருந்தாஜினி விவேகானந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாகிஸ்தான் நாட்டில் அண்மையில் அடித்துக் கொல்லப்பட்டவரின் படுகொலைக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த அவர், இதேபோன்று தனது கணவனும் அடித்துக்கொலை செய்யப்பட்டிருந்தபோதிலும் அதற்கு எதிராக யாரும் பேசுவதற்குக் கூட முன்வரவில்லையெனவும் கவலை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த உயிரிழந்தவரின் மனைவி,

முதலில் பாகிஸ்தானில் கொடூரமாக கொல்லப்பட்டவருக்கு எனது குடும்பம் சார்பாக அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.அவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.நான் செங்கலடியில் இருக்கின்றேன்.எனது பெயர் திருமதி பிருந்தாஜினி விவேகானந்தன்.06-09-2020 ஆம் திகதி மலேசியாவில் எனது கணவரை கொடூரமாக தாக்கி கொலை செய்திருந்தார்கள்.தகப்பனை பத்து வயதில் இழந்த மகனும் அவனது தாயும் இன்று அது தொடர்பில் பேசவந்துள்ளோம்.எனது கணவன் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் எனக்கு எந்தவிதமான உதவியோ, நீதியோ கிடைக்கவில்லை.

அண்மையில் பாகிஸ்தானில் கொல்லப்பட்ட சகோதரருக்கு ஆதரவாக பலர் குரல்கொடுத்துள்ளனர்.ஆனால் எனது கணவருக்கு ஆதரவாக யாரும் ஏன் குரல்கொடுக்க முன்வரவில்லையென்ற கேள்வி எனக்குள் எழுந்துள்ளது.நான் இங்கு இனவாதம் பேசவில்லை.பாகிஸ்தானில் கொல்லப்பட்டவர் ஒரு சிங்களவர் என்ற அடிப்படையிலா அனைவரும் குரல் கொடுத்தார்கள்.நான் வறுமை நிலையில் உள்ள பெண் என்ற காரணத்தினால் எனக்கு ஆதரவு வழங்க முன்வரவில்லையா?.



இலங்கை ஜனாதிபதியிடம் நான் கையெடுத்து கும்பிட்டு கேட்கின்றேன் எனது கணவருக்கு ஏற்பட்ட அநீதிக்கு எனக்கு நீதி கிடைக்கவேண்டும்..அன்று எனக்கு ஆதரவினை வழங்கியிருந்தால் இன்று பாகிஸ்தானில் அந்த அண்ணாவுக்கு எதுவும் நடந்திருக்காது..அன்று அதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்தால் இலங்கையினைச் சேர்ந்த எவரையும் தொடுவதற்கு அச்சப்பட்டிருப்பார்கள்.

எனது கணவனின் உடலை நான் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு எடுப்பதற்கு உலக நாடுகளில் உள்ள உறவுகளிடம் பிச்சையெடுத்தே அவரின் சடலத்தினைக் கொண்டுவந்தேன்.எனது மகன் மூன்று வயதாக இருக்கும்போது தொழிலுக்காக மலேசியாவுக்குச் சென்றவர்.பெட்டியில் சாமான்கள் அனுப்புகின்றேன் என்று கூறிவிட்டுச்சென்றவர் இறுதியாக பெட்டியில்வந்திருக்கின்றார் என்று காட்டினார்கள்.வீட்டுக்குக் கூட கொண்டுவரமுடியாமல் கொழும்பில் இறுதிச்சடங்கினை செய்தோம்.

ஆனால் எனது கணவனின் உடலத்தில் இனவாதத்தினை காட்டாமல் அனைத்து மதத்தவர்களும் வருகைதந்து தொட்டு தூக்கி அடக்கம் செய்ய உதவினார்கள்.பாகிஸ்தானில் அவருக்கு நடைபெற்றது பாரிய அநீதி.அதேபோன்ற அநீதி எனக்கும் ஏற்பட்டது.அவரின் மனைவி எவ்வாறு இருக்கின்றாரோ அதேபோன்று நானும் 28 வயதில் கணவனை இழந்து பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றேன்.

பாகிஸ்தானில் இடம்பெற்ற சம்பவத்திற்கு பாகிஸ்தான் அரசாங்கம் மன்னிப்புக்கூட கேட்டுள்ளது.ஆனால் எனக்கு எந்தவிதமான ஆதரவும் கிடைக்கவில்லை. எனது கணவனை கொலை செய்தவர்கள் யார் என்பது கூட தெரியாத நிலையுள்ளது. எனது கணவனின் படுகொலைக்கு எனக்கு நீதி வேண்டும்.எனக்கு வழங்கப்படும் நீதியானது இலங்கையின் ஒவ்வொரு பெண்ணுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்கும்.

எனது கணவர் உல்லாசத்திற்காக வெளிநாடு செல்லவில்லை.வீட்டில் இருந்த கஷ்டம்,கடனை அடைப்பதற்காகவே சென்றார். இன்றுகூட அந்தக் கடனிலிருந்து மீளமுடியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.எனது கணவனின் கொலை தொடர்பில் மலேசியா அரசாங்கமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை,எனக்கு எந்த அறிவிப்பினையும் தரவில்லை.இலங்கை ஜனாதிபதிக்கும் நான் கடிதம் எழுதியிருந்தேன்.ஆனால் யாரும் எந்த உதவியும் செய்யவில்லை.

நான் ஏழையென்ற காரணத்தினாலேயே யாரும் குரல் கொடுக்கவும் ஆதரவு வழங்கவும் முன்வரவில்லை.பணம் படைத்தவர்களுக்கு பிரச்சினையென்றால் பலர் குரல் கொடுக்கின்றனர், நீதி கோருகின்றனர். என்னுடைய நிலையில் பல பெண்கள் இருக்கின்றனர். இவ்வாறே அமைதிகாத்தால் எந்த நாட்டிலும் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.எமது பிரச்சினைக்காக அன்று இந்த ஊடகங்கள் குரல் கொடுத்திருந்தால் பாகிஸ்தானில் இன்று அந்தச் சம்பவம் நடந்திருக்காது.

எனது கணவனின் உடல் இங்கும் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. மூளை உட்பட பல உடற்பாகங்கள் இல்லாத நிலையேயிருந்தது. இங்கும் பிரேத பரிசோதனை அறிக்கையில் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகவேயிருந்தது.எனவே எனது கணவனின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என்றார்.

# இரு முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகளால் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் அவப்பெயர்

## இம்ரான் எம்.பி.தெரிவிப்பு

முள்ளிப்பொத்தானை நிருபர்

பல்லின சமூகம் வாழும் இந் நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் மீது மாற்று மத சகோதரர்கள் தவறான எண்ணம் கொள்ளும் வகையில் செயற்பட்டு சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையை முஸ்லிம் காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் கைவிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட எம்.பி.யான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் ஆகியோரின் விருப்பத்துடன் தான் அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் தற்போது பரவலாகி வருகின்றது. இக்கட்சிகளோடு நடந்த பேச்சுவார்த்தைகளில் தானும் ஈடுபட்டதால் அல்லாஹ் மீது ஆணையாக இதனை உறுதிப்படுத்துவதாக 20க்கு ஆதரவாக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் தமது பாராளுமன்ற



உறுப்பினர்கள் 20 க்கு ஆதரவாக வாக்களித்ததற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.20 க்கு ஆதரவாக வாக்களித்த தங்களது எம்.பி.க்களை கட்சியிலிருந்து விலக்கியுள்ளோம். கட்சியில் வகித்த பதவிகளில் இருந்து அவர்களை விலக்கியுள்ளோம் என்று ஊடகங்களில் அறிக்கை விட்டதைத் தவிர இக்கட்சிகள் இவர்களுக்கெதிராக வேறு என்ன நடவடிக்கை எடுத்துள்ளன என்று கேட்க விரும்புகின்றேன்.

தலைவர்களுக்கும், தங்களது எம். பிக்கள் 20 க்கு ஆதரவாக வாக்களித்ததற்கும் தொடர்பு இல்லை என்றால் இதுவரை இந்த எம்.பி.க்களுக்கெதிரான மேலதிக நடவடிக்கைக்கு இக்கட்சிகள் வந்திருக்கும். தலைவர்களது அனுசரணையோடு எம்.பி.க்கள் செயற்பட்டதால்தான் அவர்களால் வெறும் ஊடக அறிக்கையோடு மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளை இக்கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் 20க்கு ஆதரவாக வாக்களித்த தங்களது எம்.பி.க்களை மன்னித்துவிட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறி அப்படியானவர்களுக்கு கட்சியில் உயர் பதவிகள் வழங்குவதுதான்.மர்ஜான் பளீல் எம்.பி. கூறுவதையும், இக்கட்சிகளின் செயற்பாடுகளையும் சிந்தித்துப் பார்க்கின்ற போது இந்தத் தலைவர்கள் சமூகத்தை ஏமாற்றி வருகின்றார்கள் என்பதை தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இவர்கள் அங்கொன்றும், இங்கொன்றும் பேசுவதால் தான் இந் நாட்டு முஸ்லிம்கள் பெரும் அவமானங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். நம்பிக்கைக்கு துரோகம் செய்பவர்கள், தொப்பி பிரட்டிகள் என்றெல்லாம் முஸ்லிம் சமூகம் அவப்பெயரை சம்பாதித்துள்ளது. முஸ்லிம்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல. அற்ப இலாபங்களுக்காக இடம் மாறுவார்கள். அவர்கள் கொள்கையற்ற சமூகம் என்றெல்லாம் மாற்று மத சகோதரர்கள் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி எடைபோட இக்கட்சிகளே காரணமாக இருக்கின்றன என்றார்.

# பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபரை முதலமைச்சர் முழந்தாளிட வைத்த விவகாரம் இணக்கப்பாட்டுக்கு வந்தது

பதுளை நிருபர்

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர், ஊவா மாகாண முதலமைச்சரிடம் முழந்தாளிட்டமை தொடர்பான முறைப்பாடு, பதுளை இணக்கச் சபையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இரு தரப்பினருக்கிடையில் பூரண இணக்கப்பாடு ஏற்பட்டது.

ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகன சாமர சம்பத் தசநாயக்க, கடந்த 2018 ஆம் ஆண்டில் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் பவானி ரகுநாதனை முழந்தாளிடுமாறு கூறிய சம்பவம் இடம் பெற்றது. இச் சம்பவம் பதுளை மாவட்டத்தில் மட்டுமன்றி முழு நாட்டிலும் பல்வேறு இடங்களில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டதுமன்றி, முன்னாள் முதலமைச்சருக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

இச்சம்பவம் குறித்து, வித்தியாலய அதிபர் பதுளை பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்திருந்தார். முன்னாள் முதலமைச்சருக்கு ஆதரவான ஒருவரின் மகளை, பதுளைதமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் அனுமதிக்க,வித்தியாலய அதிபர் மறுத்தமையினாலேயே, மேற்படி அதிபர் முழந்தாளிட்ட சம்பவம் இடம்பெற்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.இப் புகார் குறித்து, பதுளை பொலிஸார், பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். மஜிஸ்ரேட் நீதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய மேற்படி புகார், பதுளை இணக்கச் சபைக்கு விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது.மேற்படி புகார் குறித்த விசாரணைகள், பதுளை சர்வோதய நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற இணக்க சபையில் மேற்கொள்ளப்பட்டன. இவ் விசாரணைகளின் போது, இரு தரப்பினராலும் புகாரை நிறைவிற்கு கொண்டு வர பூரண இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது.

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடிய ராஜா கொல்லுரேயின் மறைவு இடதுசாரி இயக்கத்துக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவரான சோஷலிச மக்கள் முன்னணியின் செயலாளர், வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேயின் இழப்பு இலங்கை இடதுசாரி இயக்கத்துக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சியாகும் என ஜனநாயக இடதுசாரி முன்னணி செயலாளரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வாசுதேவ விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அனுதாபம்

ராஜா கொல்லுரே தனது மாணவப் பருவத்திலிருந்தே தனது வாழ்க்கையையும் இருப்பையும்சர்வதேச கம்யூனிசத்திற்காக அர்ப்பணித்தவர். ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், விடயங்களை பகுப்பாய்வு செய்து செயல்படுத்தவும் தைரியமாக முன்வந்ததன் ஊடாக அவர் அரசியல் அரங்கில் சிறந்து விளங்கினார். அவர் உலக கம்யூனிச இயக்கத்திலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான முகாமிலும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார். ராஜா கொல்லுரே யின் பாதையில் இலங்கை மக்களை தொடர்ந்து அணிதிரட்டுவது இடதுசாரி மற்றும் முற்போக்கு மக்களின் பணியாகும். பொதுமக்களின் மேம்பாட்டுக்கான அவரின் அர்ப்பணிப்புக்கு எமது கௌரவத்தையும் மரியாதையையும் செலுத்துகின்றோம்.

# உதிரம் கொடுத்து உயிர் காப்போம்

சாய்ந்தமருது நிருபர்

கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டிலும் கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த தற்சமயம் லண்டனில் வசிக்கும் சுதாகர் கவிஷ்காவின் பூரண அனுசரணையிலும் 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் கருப்பொருளில் பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

தற்கால கொரோனா சூழல் கருதி நிகழ்வானது சுகாதார உத்தியோகத்தர்களின் ஆலோசனைக்கு அமைவாக சகல சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுடனும் சமூக அக்கறையுடனும் சமூக இடைவெளிகளுடனும் இடம்பெறும் என்பதையும் அறியத் தருவதோடு முதல் 100 கொடையாளிகளுக்கு ஞாபகார்த்த அன்பளிப்பாக ரீசேட் ஒன்றும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புகைப்படப் போட்டியில் ஸாஹிரா மாணவன் முதலிடம்

மாளிகைக்காடு நிருபர்

பேராதனை பல்கலைக்கழகத்தின் ரொடரக்ட் கிளப்பினால் தேசியரீதியாக நடத்தப்பட்ட புகைப்படப் போட்டியில் மாணவர்களுக்கான பிரிவில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை விஞ்ஞானப் பிரிவு மாணவன் ஜஷீப் அஹமட் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதற்காக இம் மாணவனுக்கு பணப்பரிசில் மற்றும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலையின் அதிபர் எம். ஐ. ஜாபிர் தலைமையில் குறித்த மாணவன் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் பாடசாலையில் புகைப்பட மற்றும் ஒளிபரப்பு கழகத்தின்



பொறுப்பாசிரியர் ஷஃபி எச். இஸ்மாயில், உப பொறுப்பாசிரியர்களான எம்.வை.எம்.ரகீப், எம்.எச். எம். முஸ்தன்சிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சரிந்து வீழ்ந்த பாரிய ஆலமரம்

களுவாஞ்சிக்குடி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டம் முண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி தேவாலய வீதியில் நின்ற பாரிய ஆலமரம் ஒன்று திங்கட்கிழமை பெய்த பலத்த மழை காரணமாக சரிந்து விழுந்துள்ளது.

மிகவும் பழமைவாய்ந்த இந்த ஆலமரம் விழுந்ததனால் அருகில நின்ற மூன்று பனைமரங்களும் முறிந்துள்ளன. எனினும், இந்த மரங்கள் முறிந்ததனால் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை.



# டீசல் பவுஸர் விபத்து: இருவர் படுகாயம்

பத்தனை நிருபர்



அட்டன் - கொழும்பு பிரதான வீதியில் டீசல் பவுஸர் ஒன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் விபத்துக்குள்ளானது.

கொழும்பு முத்துராஜவெல பகுதியிலிருந்து கொட்டகலையிலுள்ள பெற்றோலிய களஞ்சியசாலைக்கு டீசலை கொண்டு செல்லும் போதே கட்டுப்பாட்டை இழந்த குறித்த பவுஸர் அட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை மெலிபன் தொழிற்சாலைக்கு அருகாமையில் பிரதான வீதியில் விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் பவுஸரில் இருந்த டீசல் வெளியேறி வீதியில் பரவியுள்ளது. இவ் விபத்தினால் சில மணி நேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் சாரதியும், உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் தங்கராஜாவின் பூதவுடல் நல்லடக்கம்

பட்டிருப்பு நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினரும் எழுத்தாளரும் இலங்கைதமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் செயலாளருமான அமரர் வேலுப்பிள்ளை தங்கராஜாவின் பூதவுடலுக்கு மட்டக்களப்பு மாநகர சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னாரின் பூதவுடல் கறுவப்பங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கைதமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பொன்.செல்வராஜா தலைமையில் கட்சிக்கொடி போர்த்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் தமிழரசுக் கட்சியின் சார்பில் நடத்தப்பட்டது.

அஞ்சலியை தொடர்ந்து அன்னாரது பூதவுடல் மட்டக்களப்பு மாநகர சபைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து உடலம் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு மட்டக்களப்பு கல்லியங்காடு இந்து மயானத்தில் பெருமளவானோர் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# இராமகிருஷ்ணாவில் சின்னம் சூட்டும் நிகழ்வு



காரைதீவு நிருபர்

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையில் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, பாடசாலை சுகாதார மேம்பாட்டுக் கழகத்தினருக்கு அடையாளஅட்டை வழங்கும் நிகழ்வு ஆகியன கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளை கல்லூரி அதிபர் ஜே. ஆர். டேவிட் தலைமை தாங்கி நடத்தினார்.ஆலையடிவேம்புக்கான கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் எம். மயூரன் பிரதம விருந்தினராக பங்கேற்றார்.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் என். அருந்திரன், உடற்கல்வி பிரதி கல்விப் பணிப்பாளர் எச். நைரூஸ்கான், பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் பி. தணிகாசலம், கல்லூரியின் பிரதி அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், மாணவத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இறக்காமம் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்

இறக்காமம் நிருபர்

இறக்காமம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எவ்வித எதிர்ப்புமின்றி திங்கட்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட அமர்வில் 13 உறுப்பினர்களில் 11 பேர் இதற்கு ஏகமனதாக ஆதரவை நல்கியதுடன் இரண்டு உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாயிருக்கவில்லை.

2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமானம் சுமார் 100 மில்லியன் ரூபாவில் 60 வீதமான தொகை முழுக்க முழுக்க மக்கள் நலனுக்கு முன்னுரிமை வழங்கி இறக்காமம் பிரதேச சபைக்குட்பட்ட 8 வட்டாரங்களுக்கும் உள்ளக வீதி, வடிகான் புனரமைப்புப் பணிகளுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா வீதமும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும்,வீதி விளக்கு பொருத்துவதற்கு ஒரு மில்லியன் ரூபாவும் கல்வி அபிவிருத்தி,கலாசாரம், வறுமை ஒழிப்புக்கு மூன்று இலட்சம் ரூபாவும், சுயதொழில் ஊக்குவிப்புக்கு இரண்டு இலட்சம் ரூபாவும்,இயற்கை அனர்த்தத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வவுனியாவிலும் தபால் ஊழியர் பணிப் பகிஷ்கரிப்பு

வவுனியா நிருபர்

வவுனியாவிலும் தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் சிறுநீரக கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்ற பல்வேறு தேவைகளின் பொருட்டு தபால் நிலையத்திற்கு வருகை தந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வு கிடைக்காவிடின் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராவோம் என வவுனியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 339 கோடி ரூபாவில் நிர்மாணிக்கப்பட்ட காசி விஸ்வநாதர் ஆலய வளாகம் : பிரதமர் மோடி திறந்து வைத்தார்




உத்தரப் பிரதேசம் வாரணாசியில் காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி செய்யும் 12 மாநிலங்களின் முதல்வர்கள் பங்கேற்றனர். பிரதமர் நரேந்திர மோடி வாரணாசியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். காசி விஸ்வநாதர் கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார் பிரதமர் மோடி முன்னதாக கங்கையில் புனித நீராடினார்.

பின்னர் 339 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தின் முதல் கட்டிடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் நெருக்கடியிருந்த தெருக்கள் வழியாக மோசமான சுற்றுப்புறங்களைக் கடந்து ஆலயத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. கங்கையில் நீராடி புனித நீரை எடுத்துச் சென்று கோவிலில் வழங்குவது தொன்று தொட்டு நடந்து வந்த வழக்கமாகும்.

இந்த நிலையை மாற்றும் வகையில் காசி விஸ்வநாதர் ஆலய வளாகத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது காசி விஸ்வநாதர் ஆலயத்தையும் கங்கை நதியின் கரைகளையும் இணைக்கும் பாதையை பக்தர்கள் எளிதில் அணுகும் வகையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு 2019-ம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின.

இத்திட்டத்தின் அனைத்து நிலைகளிலும் பிரதமர் நரேந்திர மோடி தீவிர ஆர்வம் காட்டி வந்தார். அடிக்கடி ஆய்வுகளை மேற்கொண்டு ஆலோசனைகளையும் அவர் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பழங்குடியினரின் கிராமத்தில் 4 பேருக்கு எமனான விருந்து

## 12 பேர் மருத்துவமனையில் அனுமதி

குஜராத்தின் தஹோத் மாவட்டத்தில் பழங்குடியினரின் பாரம்பரிய மத விழாவில் நடைபெற்ற உணவு விருந்தின் போது உணவு விசமானதில் 4 பேர் பரிதாபமாகெ உயிரிழந்தனர்.

மேலும் 12 பேர் தேவ்கத் பரியா நகரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் இருவரின் நிலை கவலைக்கிடமெனத் தெரிவிக்கப்படுகின்றது. 4 பேரின் மரணத்திற்கான காரணம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகெ பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சுகாதாரத் துறை அதிகாரிகள் கிராமத்திற்கு வந்து கிராம மக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருட்களின் மாதிரிகளைச் சேகரித்து மேலதிக பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

உணவில் விஷம் ஏற்படுதல் அல்லது உள்ளூர்வாசிகள் தாங்களாகவே காய்ச்சிய பானத்தைக் குடித்த காரணத்தினால் இந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கலாமெனெ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# மனைவியின் தொலைபேசி உரையாடலை கணவர் பதிவு செய்வது மனிதவுரிமை மீறல்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு



மனைவியின் தொலைபேசி உரையாடலை அவரது அனுமதியின்றி கணவர் பதிவு செய்வது தனியுரிமை மீறலாகுமென பஞ்சாப் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பஞ்சாப் மாநிலத்திலுள்ள பதிண்டா மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதிக்கு பெண் குழந்தையொன்று உள்ள நிலையில் மனைவி தன்னைக் கொடுமைப் படுத்தியதாக கூறி விவாகரத்துக் கோரி குடும்ப நல நீதிமன்றத்தில் கணவர் மனு தாக்கல் செய்தார். விசாரணையின்போது தன் மனைவி பேசிய அலைபேசி உரையாடல்களை பதிவு செய்துள்ளதாகவும் அதனை தனது தரப்புச் சாட்சியாகெ தாக்கல் செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமெனவும் கணவர் கோரினார். இதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. இந்த உத்தரவை எதிர்த்து பஞ்சாப் - ஹரியானா உயர் நீதிமன்றத்தில் மனைவி மனுத் தாக்கல் செய்தார். மனு மீதான விசாரணையின்போது மனைவியின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இந்த உரையாடல் மனைவிக்குத் தெரியாமல் பதிவாகியுள்ளது. எப்போது பதிவு செய்யப்பட்டதெனத் தெரியாது. எனவே அதன் உண்மைத்தன்மையை உறுதி செய்ய முடியாதென்றார். இதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் குடும்ப நல நீதிமன்றத்தின் உத்தரவை உடனடியாக ரத்துச் செய்தது. இந்த வழக்கு குறித்து கருத்து தெரிவித்த நீதிமன்றம் மனைவியின் தொலைபேசி உரையாடலை ரகசியமாகப் பதிவு செய்வது அவரது தனியுரிமையை மீறும் செயலாகும். தம்பதியர்களுக்கிடையே உரையாடல் நடந்த சூழ்நிலை அதனைப் பதிவு செய்த கணவர் எவ்வாறு பதிலளித்தார் என்பதை உறுதிப்படுத்த முடியாது. ஏனெனில் இந்த உரையாடல் ரகசியமாகப் பதிவுசெய்யப்பட்டதெனத் தெளிவாகின்றது. மனைவியின் பேச்சைப் பதிவு செய்யும் நோக்கில் தேவையற்ற கருத்துகளை கணவர் தெரிவித்திருக்கலாம். எனவே குடும்பநல நீதிமன்றத்தின் உத்தரவு ரத்துச் செய்யப்படுவதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# குஜராத்தில் மேலுமொருவருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதி

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை வந்த குஜராத்தை சேர்ந்த நபருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குஜராத் மாநிலத்தில் ஏற்கனவே ஒமைக்ரோன் தொற்றினால் 4 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் ஒருவருக்கு ஒமைக்ரோன் தொற்றிருப்பது உறுதியாகியுள்ளது. இதனால் குஜராத்தில் ஒமைக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து கடந்த வாரம் டெல்லிக்கு வந்த நபருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. ஓரிரு நாட்கள் இடைவெளியின் பின்னர் அஹமதாபாத்தில் இரண்டாவது முறையாக கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால் இந்த இரண்டு சோதனைகளிலும் நேர்மறையான முடிவு பெறப்பட்டது. அதன் பின்னர் கொரோனா தொற்று அறிகுறிகள் தெரிந்த நிலையில் மூன்றாவது முறையாக பரிசோதனை செய்தபோது குறித்த நபருக்கு ஒமைக்ரோன் தொற்றிருப்பது உறுதியானது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தியாவைப் பொறுத்தவரை கர்நாடகா மகாராஷ்டிரா ராஜஸ்தான் குஜராத் டெல்லி கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் ஒமைக்ரோன் வைரஸ் ஏற்கனவே பரவ ஆரம்பித்து தொற்று எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.


## கேள்வி அறிவித்தல்
### சபை நிதி வேலைத்திட்டம் – 2021
### மன்னார் நகர சபை, மன்னார்.

திட்டத்தின் பெயர் ஒப்பந்த இல.
Construction of Drinage System at Periyakamam Main Road Eluthoor, Mannar. NP/14/42(2)/W/CF/2021/24
Construction of Drainage Channel at 98 Housing Scheme Road, Pallimunai East. NP/14/42(2)/W/CF/2021/25
Construction of Drainage Channel at Al-Az-Har School Behind Road, Uppukulam. NP/14/42(2)/W/CF/2021/26

தலைவர், பெறுகைக்குழு, மன்னார் நகர சபை, மன்னார். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்கு கோருகின்றார்.

01. தேசிய போட்டிக்கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. இருப்பினும், வடமாகாணத்தின் நிர்வாக எல்லையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

02. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, 04/2016(III) இலக்க 18.02.2021ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி மற்றும் வடிகால் அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் / செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், (தொலைபேசி: 023-2251898, 023-2222351, 023-2222591, மின்னஞ்சல்–mannaruc154@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்விஆவணமொன்றைத் தலைவர் / செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், எனும் இடத்தில் 15.12.2021 ஆம் திகதியிலிருந்து 29.12.2021 ஆம் திகதிவரை அலுவலக வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், எனும் முகவரிக்கு 29.12.2021ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகைக்கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/42(2)/W/CF/2021/24 | Construction of Drinage System at Periyakamam Main Road Eluthoor, Mannar. | 3.18 | 02 Months | C8 and C7 (Road & Drainage) | 02.03.2022 | 32,000.00 | 30.03.2022 |
| NP/14/42(2)/W/CF/2021/25 | Construction of Drainage Channel at 98 Housing Scheme Road, Pallimunai East. | 3.44 | 02 Months | C8 and C7 (Road & Drainage) | 02.03.2022 | 35,000.00 | 30.03.2022 |
| NP/14/42(2)/W/CF/2021/26 | Construction of Drainage Channel at Al-Az-Har School Behind Road, Uppukulam. | 2.65 | 02 Months | C8 and C7 (Road & Drainage) | 02.03.2022 | 27,000.00 | 30.03.2022 |

08. கேள்விகோரல் பற்றிய, முன்கூட்டிய கூட்டம் 23.12.2021ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு மன்னார் நகர சபை, அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
மன்னார் நகரசபை, மன்னார்,
14.12.2021


# புதிதாக 5 784 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

இந்தியாவில் புதிதாக 5 784 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3கோடியே 47 இலட்சத்து 3 ஆயிரத்து 644 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து 7 ஆயிரத்து 995 பேர் ஒரே நாளில் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 41 இலட்சத்து 38 ஆயிரத்து 763 ஆக உயர்வடைந்துள்ளது.

இதே வேளை கொரோனா வைரஸ் தொற்றினால் நேற்று முன்தினம் காலையுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 252 பேர் உயிரிழந்துள்ளதைத் தொடர்ந்து மொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 75 ஆயிரத்து 888 ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளெ 88 ஆயிரத்து 993 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## அறிவித்தல்

யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட், (REG.NO.PV7139)
மற்றும் யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், (REG. NO. PV15252)
ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு

யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை இல. 107, ஹாஜுப்பிட்டிய லேக் ரோட், கொழும்பு 02 என்ற முகவரியில் கொண்டுள்ள ஒரு நிறுவனம் என்ற ரீதியில் யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் ஒன்றிணைவது பற்றி இத்தால் அறியத்தருகிறது. இந்த யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது, இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும். இல. 107, ஹாஜுப்பிட்டிய லேக் ரோட், கொழும்பு 02 என்ற முகவரியில் தமது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 243 க்கு அமைய இந்த அறிவித்தல் மேற்கொள்ளப்படுகிறது.

யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது, யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முழுமையாக உரிமை கொள்ளப்பட்ட ஒரு இணை நிறுவனமாகும். இந்த ஒன்றிணைப்பின் காரணமாக, யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் சொத்துக்கள் யாவும் யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சென்றடைகிறது.

இந்த ஒன்றிணைப்பை, யுனிபெறுன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் மற்றும் யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் என்பவற்றின் பணிப்பாளர் சபை, கம்பனிகள் சட்டத்தின் 242(1) என்ற சரத்தின் கீழ் அங்கீகரித்துள்ளன. குறித்துரைக்கப்பட்ட ஒன்றிணைப்பின் பின்னர் யுனி ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் செயற்பாட்டிலுள்ள ஒரு நிறுவனமாக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கு அமைய
பீஸ்லைல்லேட் (பிரைவேட்) லிமிடெட்
இல.45, பிரேபுறுக் வீதி, கொழும்பு 02 - செயலாளர்கள்
2021-12-15



## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கதிரவேற்பிள்ளை அரியரட்ணம்
(அரியம்)



மலர்வு 28.10.1950 உதிர்வு 20.11.2018

ஆண்டுகள் மூன்று ஆனபோதும் எம் நெஞ்சில் ஆறாத வடுக்களாய் உங்கள் நினைவுகள்
எத்தனை இன்பம் எம் வாழ்வினில் வந்தபோதும் அத்தனையும் தாண்டிய துன்பமாய் உங்கள் பிரிவு
கள்ளம் கபடமில்லா உங்கள் சிரிப்பு கண்டிப்புடன் கூடிய உங்கள் பாசம்
எதையும் துணிந்து சாதிக்கும் வல்லமை அத்தனையும் விட்டுச் சென்றீர் எங்களுடன்
ஆலவிருட்சமாய் அவனியிலே வாழ்ந்து - எமை பார்போற்ற ஆளாக்கி இன்பம் கண்டவரே
உங்களை நினைத்து தினம் வாடித் தவிக்கின்றோம்
விடியும் பொழுதெல்லாம் உங்கள் நினைவே எங்கள் மனதெல்லாம்...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், பாசமிகு மருமக்கள், அன்புப் பேரப்பிள்ளைகள்.

பழைய பொலிஸ் நிலைய வீதி ,வல்வெட்டி T.P.0775654270



# தம்பலகாமத்திலும் தபால் ஊழியர் பணிப் புறக்கணிப்பு

மூதூர் நிருபர்

அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும், அடையான பணிப்பு றக்கணிப்பில் ஈடுபட்டதால் தம்பலகாமம் பகுதியில் உள்ள உப தபாலகங்களும் நேற்று மூடியிருந்தன. தம்பலகாமம் உப தபாலகம், கல்மெடியாவ உப தபாலகம் உள்ளிட்ட அனைத்து தபாலகங்களும் மூடப்பட்டு வெறிச்சோடி காணப்பட்டது. சேவையுடன் தொடர்புடைய தங்களது பிரச்சினைகள் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்பு றக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

# கந்தளாயில் கடும் மழை 50 குடும்பங்கள் பாதிப்பு

முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கி வருகின்றன.

இம்மாவட்டத்தின் கந்தளாய், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், புல்மோட்டை, மூதூர் மற்றும் தோப்பூர் போன்ற பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருகின்றது.

கந்தளாய் பகுதியில் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளதோடு, வீதிகளிலும் வெள்ளநீர் வழிந்தோடுவதோடு வடிகான்களிலும் நீர் நிரம்பி காணப்படுகின்றது.

கந்தளாயில் தாழ்நிலப் பகுதிகளில் வசித்து வரும் ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு உறவினர்களின் வீடுகளில் தங்கி வருகின்றார்கள். தொடர் மழையால் கந்தளாயில் பேராறு மதுராசாநகர் சிவன்கோவில் வீதி, கெமுனு மாவத்தை போன்ற பல இடங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

# கொக்குளாய் பொலிஸ் நிலைய திறப்பு விழா

முல்லைத்தீவு நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பகுதியில் இயங்கிவந்த கொக்குளாய் பொலிஸ் காவலரண் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு பொலிஸ் நிலையமாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி அமரசிங்க தலைமையில் நடைபெற்ற பொலிஸ் நிலைய திறப்பு நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கார சிறப்பு விருந்தினராக வருகை தந்து பொலிஸ் நிலையத்தினை திறந்து வைத்தார்.

# 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் நாடு பாதாளத்திற்குள் விழும்

## நளீன் பண்டார எம்.பி. தெரிவிப்பு





பத்தனை நிருபர்

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதலபாதாளத்திற்குள் விழும் நிலை உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமானால் அதற்கு தற்போதைய அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - வலப்பனையில் திங்கட்கிழமை விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே இந்த எச்சரிக்கையை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம். தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படிதான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே இவர்களின் செயற்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மனநலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணம். எனவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆகவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் வெடித்து சிதறும் என்பதே உண்மை என்றார்.

# புதிய பாலம் தாழிறங்கியது

பதுளை நிருபர்

பதுளை பசறை பிரதான வீதியில் 2 கட்டையில் இருந்து தெனிபெத்தை, கெந்தகொல்ல ஆகிய பல பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான வீதியில் முதலாவதுமைல் கல்லுக்கு அருகே அமைக்கப்பட்டு இருந்த புதிய பாலம் தற்போது தாழிறங்கி உள்ளது.

இப்பாலம் அமைக்கப்பட்டு சுமார் ஒரு வருட காலம் கூட ஆகாத நிலையில் இப்பாலம் தாழிறங்கி உள்ளமை சம்பந்தமாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர். மேலும் தற்போது போக்குவரத்ததுக்காக பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட பழையபாலத்திலேயே வாகனங்கள் செல்கின்றன. இருப்பினும் பழைய பாலம் பாதுகாப்பற்றநிலையில் மிகவும் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றதோடு அதனூடாகவேதற்போது போக்குவரத்தும் இடம்பெறுகின்றது.

எனவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி பாதுகாப்பான பாலமொன்றைஅமைத்துத் தருமாறும் தற்போது பயன்படுத்தப்படும் பழைய பாலத்தில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



# வவுனியாவில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 'பூஸ்டர்'

வவுனியா நிருபர்

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 30வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது கொவிட் தடுப்பூசி பூஸ்டர் வழங்க சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் மற்றும் பாடசாலை கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் தமது அலுவலகங்களிற்கு அல்லது பாடசாலைகளிற்கு அருகில் உள்ள தடுப்பூசி நிலையங்களிற்கு சென்று 3 ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று புதன்கிழமை கனகராயன்குளம் வைத்தியசாலை, நாளை வியாழக்கிழமை மாறாஇலுப்பை பொதுநோக்கு மண்டபம் மற்றும் நடமாடும் சேவை, வெள்ளிக்கிழமை வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் நடமாடும் சேவை ஆகிய நிலையங்களில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை ஏற்றப்படவுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கடந்திருப்பின் தமது தடுப்பூசி அட்டையுடன் சென்று மூன்றாவது தடுப்பூசி பூஸ்டரினை பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு முதலாவது, இரண்டாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களும் குறித்த நிலையங்களுக்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# பொன்னான பரிசு நூல் வெளியீடு



தலைமன்னார் நிருபர்

மன்னார் அடம்பனைச் சேர்ந்த கம்பிகளின் மொழி பிரேம் எழுதிய 'பொன்னான பரிசு' நூல் வெளியீட்டு விழா திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பண்ணையில் அதிபர் என்.நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் கலந்து கொண்டார்.

# ஸ்ரீல.சு க.வின் இந்து சமய விவகார செயலாளராக சிவபாலன் நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட பொதுக் கூட்டம் கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சரத் ஏக்கநாயக்கவின் நெறிப்படுத்தலுடன் கண்டி கெட்டம்பையிலுள்ள ரோயல் மோல் ஹோட்டலில் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கண்டி மாவட்ட ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அமைப்பாளர் சிவபாலனுக்கு இந்து சமய விவகார செயலாளர் நியமனக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார். கட்சியின் பொதுச் செயலாள தயாசிறி ஜயசேகர மற்றும் ஏனைய அரசியல் உயர்பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் எனப்பலர் இதில் கலந்து கொண்டனர்.



கொழும்பு -3 பிஷப் கல்லூரியில் நடைபெற்ற 'அபூர்வ நாட்டியம்' நிகழ்வில் பங்கேற்ற இலங்கை-இந்திய நட்புறவு சங்கத் தலைவரும், அமைச்சருமான சமல் ராஜபக்ஷ மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதமரின் இந்து மத இணைப்பாளர் பாபுசர்மா, சமூக பிரமுகர் சி. அருளானந்தம் ஆகியோரை காணலாம்.

# வவுனியாவில் வாகனங்களை வழிமறித்து மக்கள் போராட்டம்



நெளுக்குளம் நிருபர்

வவுனியா ஓமந்தை, பொற்கோவிலுக்குச் செல்லும் பிரதான வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கையை முன்வைத்து அங்குள்ள மக்கள் வாகனங்களை வழிமறித்து போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில்,

வவுனியா ஓமந்தை பொற்கோவில் செல்லும் வீதி அங்குள்ள கிரேசர் ஒன்றின் பயன்பாட்டினால் மிகவும் பாதிப்படைந்து மக்கள் பயன்பாட்டிற்குதவாத வகையில் காணப்படுகின்றது. இவ்வீதியை சீரமைத்துத் தருமாறு பல தடவை கோரியும் அது சீரமைக்கப்படவில்லை. எனவே எமது பாவனையிலுள்ள வீதி அங்குள்ள கிரேசர் ஒன்றிலிருந்து அகழப்பட்டு வரும் கற்கள் கொண்டுசெல்லும் கனரக வாகனங்களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆலயத்திற்குச் செல்லவும் பாடசாலைகளுக்குச் செல்லவும் நோயாளர்களை அழைத்துச் செல்லவும் பல்வேறு அசௌகரியங்களை மேற்கொண்டு வருகின்றோம். எமது வீதி சீரமைப்பதற்குரிய உத்தரவாதம் அளிக்கப்படும் வரையில் எமது போராட்டம் தொடரும் என்றனர். அத்துடன் அங்கிருந்து கற்கள் அகழ்வு மேற்கொண்டு வரும் வாகனங்களை வழிமறித்து அப்பகுதி மக்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்திற்குச் சென்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி கோகிலகுமார் அஞ்சலி பிரதேச சபை தலைவருடன் கலந்துரையாடி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கும் அம்மக்களின் கோரிக்கை மகஜரை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 'LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்' திட்டத்தின் மூலம் வவுனியாவில் உருவாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்புத் திட்டம் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வவுனியா தரணிக்குளத்தில் உருவாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்புமற்றும் வடிகட்டுதல் திட்டம் அண்மையில் மக்கள் பயன்படுத்தப் பட்டது.

உலகப் புகழ்பெற்ற இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமான LG நிறுவனம், இலங்கையின் முன்னணி வணிகக் குழுமமான அபான்ஸ் மற்றும் Community Chest of Korea அமைப்பு Korea Friends of Hope International Sri Lanka அமைப்பு (KFHI) ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்திட்டத்தின்மூலம் இலங்கை இளைஞர்,யுவதிகளுக்கு அவர்களின் கிராமங்களில் உள்ள தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்ட வாய்ப்புகளின் மூலம் 2021ஆம் ஆண்டில் 4 திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில்,பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களில் முதலாவது திட்டத்தை மக்கள் பயன்படுத்தும் விழா 16.11.2021 ஆம் திகதி வவுனியா தரணிகுளத்தில் இடம்பெற்றது. இத்திட்டமானது வவுனியா தரணிக்குளம் கிராமத்தில் வசிக்கும் 610 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் உயிர் வாழ்வதற்கு ஒரு துளி நீர் என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் வடிகட்டுதல் திட்டமாகும். இந்த பிரதேசத்தின் மக்கள் இதுவரைக் காலம் குடிநீர் தேவைக்காக பயன்படுத்திய கிணற்றை சுத்தம் செய்து சீரமைத்து அந்த கிணற்றிலிருந்த நீரை சுத்திகரிப்பு செய்வதற்கான கழநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. சுத்தமற்ற குடிநீர் இல்லாத காரணத்தினால் இதுவரை இந்த கிராமத்தில் பலர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் நிறைவடைந்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைத்துள்ளமையினால் கிராம மக்கள் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.




'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்'திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படும் ஏனைய திட்டங்களான பலாங்கொடை ஹந்தகிரிய கிராமத்தில் 'வளமான தலைமுறையை உருவாக்குவோம்'என்ற கருப்பொருளின் கீழ் உருவாக்கப்பட்டுவரும் பொதுமருத்துவச்சிமைய மீளமைப்புத் திட்டம் அம்பாறைமுவாங்கலை கிராமத்தில் விளையாட்டுத் திறன் மிக்க நாளைய தலைமுறை என்ற கருப்பொருளின் கீழ் உருவாக்கப்பட்டு வரும் கைப்பந்து மைதானம் அமைக்கும்திட்டம், மட்டக்களப்பு சந்திவேலி கிராமத்தில் உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம் என்ற கருப்பொருளின்கீழ் உருவாக்கப்பட்டுவரும் உயிர் காக்கும் மேலங்கி வழங்கும் திட்டம் என இன்னும் மூன்று திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

குறைந்த பொருளாதார வசதியின் கீழ் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு சக்தியாக அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கிவரும் கிராமத்தைகட்டியெழுப்பும் பிரமுகர் திட்டமானது மக்கள் மத்தியில் மிகப்பெரிய ஆதரவை பெற்றுள்ளது.


## பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2021 டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அண்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08


# Commercial Leasing Finance PLC (CLC) வலுவான 1H 2021/22 செயல் திறனை வழங்குகின்றது





Commercial Leasing Finance PLC (CLC), கடந்த ஆண்டு தொற்றுநோய் காலத்தில் விவேகத்துடன் செயல்பட்டு அதன் சாதனைகளை ஒருங்கிணைத்து சிறப்பான ஆண்டிறுதிச் செயல் திறனை வழங்கி மிகத் திடமான 1H 2021/22 பிரதிபலனைக் காட்டியுள்ளது. அந்தக் காலப்பகுதியில் CLC ரூபா 2.4 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகவும் (PBT) ரூபா. 2.4 பில்லியனை வரிக்கு பிந்திய இலாபமாகவும் (PAT) ஈட்டியுள்ளது.

தொழில் துறையின் சராசரி 12.9% இற்கு எதிராக 5.7% இல் செயல்படாத கடன்களை (NPL) பேணுவதனால், இந்த சிறப்பான செயல்திறன், தனிச் சிறப்பு வாய்ந்த முகாமைத்துவத்திற்குக் காரணமாக இருக்கலாம். மதிப்பாய்வுகளின்படி நிறுவனம் கடந்த 6 மாதங்களில் அதன் விரைவான வளர்ச்சியினை தக்கவைத்துள்ளது. அதற்கு சான்றாக கடந்த 6 மாதங்களில் 12% இனையும் 12 மாதங்களில் 24 % இனையும் மொத்த லாபமாக கொண்டுள்ளது.வட்டி வருமானமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% ஆல் அதிகரித்துள்ளது.

கட்டுப்பாட்டுத் தேவைகளிற்கு அமைய 1ஆம் தர முதலீடு 7% ஆகவும் 2ஆம் தர முதலீடு 11% ஆகவும் இருக்க வேண்டிய நிலையில் நிறுவனம் முறையே 20.22% மற்றும் 20.61% தை எட்டியுள்ளது.

இந்தக் காலத்தில் CLC இன் மொத்தப் பங்கு மதிப்பு அதிகரிப்பு ரூபா 23 பில்லியனாகும். நிறுவனமானது வைப்புக்கள், மூலதனச் சந்தைப் பொருட்கள், வெளிநாட்டு நிதி மூலங்கள், வங்கிக் கடன் மூலங்கள் மற்றும் கணிசமான அளவு பங்குகள் போன்ற பல்வேறு நிதிமூலங்களினைக் கொண்டுள்ளது.

CLC இன் பலம் மற்றும் அதன் ஸ்திரத்தன்மையை மீண்டும் உறுதிப்படுத்தி ICRA Lanka Limited நிறுவனம் அதன் நிலையான கண்ணோட்டத்துடன் 2021 இல் மீண்டும் SL (A), தரத்தினை வழங்கியுள்ளது.

CLC கடந்த கவருடத்தில் 3 புதிய 1H 2021/22 கிளைகளை ஆரம்பித்து மொத்தமாக 70 கிளை வலையமைப்புடன் தனது அமைவிடத்தை விரிவுபடுத்தியுள்ளது. மேலும் 7 கிளைகள் இந்த நிதியாண்டுக்குள் திறக்கப்பட உள்ளன. இலங்கையின் முன்னணி வங்கியல்லாத நிதி வழங்குனர்களில் ஒன்றாகத் திகழும் CLC குத்தகை, கடன், காரணிப்படுத்தல்கள், இலகுப்பணம், தனிநபர் கடன்கள், இஸ்லாமிய நிதி, தங்கக் கடன்கள், கடன் அட்டைகள், நிலையான வைப்புகள், சேமிப்புக்கள் மற்றும் இவை அனைத்தையும் உள்ளடக்கிய பல நிதிச் சேவைகளை வழங்குவதுடன் பெரும்பாலான சந்தைப் பிரிவுகளில் தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளது.

கவர்ச்சிகரமான 1H 2021/22 பெறுபேறுகள் குறித்து பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி இரிஷான் திலகரத்ன கருத்து வெளியிடுகையில்;

ஒரு நிறுவனத்தின் கடினமான காலங்களில் அதன் உண்மைத் திறனைக் காணலாம் என்றும் சந்தைப் பின் புலத்தில் பல சவால்களிற்கும் மத்தியில் CLC அதன்முதல் அரையாண்டில் மிக வலுவான நிதி செயல் திறனை வழங்கியமையின் மூலம் மீண்டும் அதன் திறனை நிரூபித்துள்ளது.

NPL மற்றும் செலவினங்களை மிக உன்னிப்பாக மேற்பார்வை செய்வதுடன் கடன்துறையை மிகக் கவனமாக நிர்வகிப்பதற்கான அணுகுமுறைகளை CLC கையாண்டு நாட்டில் மிகப்பலம் வாய்ந்த நிதி நிறுவனங்களில் ஒன்றாகியுள்ளது.


### பொது அறிவித்தல்

PV 129976



## மரண அறிவித்தல்

தோற்றம்
30
03
1943



மறைவு
14
12
2021

### யோசேப் அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான யோசேப் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மோஸஸ் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மாஜொரி (மாஜி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான செல்லமணி, ரெட்ணசிங்கம், தனசிங்கம், மற்றும் சிறப்பின், பிலோமினா(ஜேர்மன்), அல்பேட் (குட்டித்தம்பி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தாரணி, மைல்ஸ், சுபாஜினி, ராஜி, எமில்ஸ், மாத்தா, ஜான் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன், றோகினி, பீற்றர், தயாளன்(பிரான்ஸ்), சுரேஸ், மேரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபாக் ஜெறோம், யூலின், பிறிதீவ், ஜெறோஸ், விஷால், ஈத்தன், வேஜில், ஷெறோன், ஜெறி, வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2021) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

214, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 0778833493



## சிறுவிளம்பரம்


### மணமகள் தேவை

1990, யாழிந்து வேளாளர், சதயம், Teacher, திருநெல்வேலி, பதிவு #6849. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைகழிவு. மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர் கூலிஇல்லை. Appointments 076664 9401. www.EQ Marriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.













# இந்தோனேஷியாவில் 7.5 ரிச்டர் அளவில்பயங்கர பூமியதிர்வு



இந்தோனேஷியாவில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 7.5 ஆக பதிவாகியுள்ளது. மேலும் இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அலை உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் நேற்றுக் காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. மவுமர் என்ற இடத்தில் இருந்து 95 கி.மீ. வடக்கே கடல்பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் பல இடங்களில் வீடுகள் குலுங்கின. இதனால் மக்கள் அலறியடித்துக் கொண்டு இருப்பிடத்தை விட்டு வெளியேறினர். ரிச்டர் அளவில் 7.5 ஆக பதிவாகியுள்ளது. இதனால், இந்தோனேஷியாவில் சுனாமி அலை உருவாகலாம் என பசுபிக் சுனாமி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தோனேஷியாவில் சுனாமி அலை உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுத்த நிலையில் இந்தியாவுக்கு பாதிப்பில்லை என இந்திய சுனாமி மையம் தகவல் தெரிவித்துள்ளது. பொதுவாக இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அதன் பாதிப்பு இந்திய கடற்பகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும். கடந்த 2004 இல் அங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி உள்ளிட்ட கடற்பகுதியில் சுனாமி ஏற்பட்டு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.



# உலகிலேயே முதல் காகிதமற்ற அரசாக மாறியது டுபாய்


உலகிலேயே 100 சதவீதம் காகிதம் இல்லாத அரசாங்கமாக டுபாய் மாறியுள்ளதாக எமிரேட்ஸின் முடிக்குரிய இளவரசர் அறிவித்துள்ளார்.

டுபாயில் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் காகிதமில்லா டிஜிட்டல் நகரமாக மாற்றும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை 5 கட்டங்களாக பிரித்து பட்டியலிடப்பட்டன.

இதன் 5ஆவது கட்டத்தின் முடிவில், டுபாயில் 45 அரசு துறைகளும் காகிதமற்றவையாக மாற்றப்பட்டன. இதன்மூலம், உலகின் முதல் காகிதமில்லா அரசு என்ற பெருமையை டுபாய் பெற்றுள்ளது. இந்தத் துறைகள் 1,800 க்கும் மேற்பட்ட டிஜிட்டல் சேவைகள் மற்றும் 10,500 க்கும் மேற்பட்ட முக்கிய பரிவர்த்தனைகளை வழங்குகின்றன.

இதுகுறித்து, எமிரேட்ஸ் இளவரசர் ஷேக் ஹம்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்த சாதனை புதுமை, படைப்பாற்றல் மற்றும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் பயணம். இது டுபாயின் உலக முன்னணி டிஜிட்டல் மூலதனம் மற்றும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்தும். அரசாங்க செயல்பாடுகள், சேவைகளை வடிவமைப்பதில் இது ஒரு முன்மாதிரியாக அதன் நிலையை வலுப்படுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம், டுபாய் அரசாங்கத்திற்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் சேமிக்கப்படுவதுடன், 14 மில்லியனுக்கும் அதிகமான மனித வேலை நேரமும் மிச்சமாகிறது என்று அவர் கூறியுள்ளார்.




# புடின் - ஜின்பிங் இன்று காணொலி முறையில் பேச்சு

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும், ரஷ்ய ஜனாதிபதி புடினும் இருதரப்பு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து இன்று புதன்கிழமை காணொலி முறையில் ஆலோசிக்க உள்ளனர்.

உக்ரைன் எல்லையில் ஏராளமான இராணுவ வீரர்களை ரஷ்யா குவித்துள்ளதையடுத்து, அந்த நாட்டுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த உச்சிமாநாடு நடைபெறவுள்ளது.

இது குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவு, ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை மேற்கொள்வர் எனத் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள தயாராகி வருவதாக கூறப்படுகிறது. அவ்வாறு ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்தால் அந்நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் புடினுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியலில் அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு பதிலடி தரும் வகையில் சீனாவும் ரஷ்யாவும் தங்களது வெளியுறவுக் கொள்கைகளில் அண்மைக் காலமாக மாற்றங்களைச் செய்து வருகின்றன. ரஷ்யாவை போலவே சீனாவும் தனது உள்நாட்டுக் கொள்கைகள் காரணமாக அமெரிக்காவால் பொருளாதாரத் தடைகளைச் சந்தித்துள்ளது.



# ஓமிக்ரோனை எதிர்கொள்ள பூஸ்டர் தடுப்பூசி முக்கியம்

## சிங்கப்பூர் பிரதமர்

ஓமிக்ரோன் வகை கொரோனா தொற்றை எதிர்கொள்ளும் சிங்கப்பூரின் உபாயத்தில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி முக்கியமானதாக இருக்கும் என அந்நாட்டுப் பிரதமர் லீ சின் லூங் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற பிரதமர் இதுகுறித்து கூறியதாவது;

சிங்கப்பூரில் கடந்த மூன்று மாதங்களில் கொரோனா தொற்றுப் பரவல் குறைந்துள்ளது. நாங்கள் எங்கள் சுகாதார அமைப்பைப் பாதுகாத்துள்ளோம். கொரோனா உயிரிழப்புகளையும் குறைவாக வைத்துள்ளோம். இப்போது ஓமிக்ரோன் வகையின் விளைவுகளை எதிர்கொள்ள தயாராகிக் கொண்டிருக்கிறோம். ஓமிக்ரோனை எதிர்கொள்ளும் எங்களது உபாயத்தில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி முக்கியமானதாக இருக்கும் என்றார்.

சிங்கப்பூரில் முதல் ஓமிக்ரோன் பாதிப்பு சாங்கி விமான நிலையத்தில் முன்களப் பணியாளர் ஒருவருக்கு கடந்த வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டது. அவர் ஏற்கனவே பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும் செலுத்திக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரின் மொத்த மக்கள்தொகையில் கடந்த வெள்ளிக்கிழமை வரையிலான நிலவரப்படி 30 சதவீதம் பேர் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர்.

அந்நாட்டில் கொரோனா மொத்த பாதிப்பு எண்ணிக்கை 2.73 லட்சமாக உள்ளது. 794 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஐ.சி.சி.யின் நவம்பர் மாதத்துக்கான

## சிறந்த வீரர், வீராங்கனை விருதுகள்

ஐ.சி.சி.யின் நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதை அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னரும் சிறந்த வீராங்கனை விருதை மேற்கிந்தியத் தீவுகளின் ஹேலே மேத்யூஸும் வென்றனர்.

அவுஸ்திரேலியா முதல் முறையாக ரி-20 உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு முக்கியமாக பங்களிப்புச் செய்ததன் அடிப்படையில் அந்த அணியின் தொடக்க வீரரான வார்னருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணப் போட்டியின் சிறந்த வீரராகவும் வார்னரே தேர்வாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் அபித் அலி, நியூஸிலாந்து பந்து வீச்சாளர் ரிம் சௌதி ஆகியோரை பின்னுக்குத் தள்ளி, நவம்பர் மாத சிறந்த வீரர் என்ற கௌரவத்தை வார்னர் பெற்றிருக்கிறார். அதுவும், இந்த விருதுக்கு முதல் முறையாக பரிந்துரைக்கப்பட்ட நிலையிலேயே அதை வென்று அசத்தியிருக்கிறார்.

மறுபுறம், பாகிஸ்தான் மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் சகல துறையிலும் சிறப்பாகச் செயல்பட்டதற்காக மேற்கிந்தியத் தீவுகள் வீராங்கனை ஹேலே மேத்யூஸுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. 2ஆவது முறையாக விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டு அதை வென்றிருக்கும் ஹேலேவுடன், பாகிஸ்தான் பந்து வீச்சாளர் அனம் அமின், பங்களாதேஷ் பந்து வீச்சாளர் நஹிதா அக்தர் ஆகியோர் போட்டியில் இருந்தனர். நவம்பர் மாதத்தில் மொத்தம் 141 ஓட்டங்கள் விளாசியிருந்த ஹேலே, 9 விக்கெட்டுகளும் சாய்த்திருக்கிறார். பாகிஸ்தான் தொடரில் நட்சத்திர வீராங்கனையாக இருந்த அவர், முதல் ஆட்டத்தில் 57 ஓட்டங்களை சேர்த்ததுடன் 3 விக்கெட் சாய்த்தார். அடுத்த ஆட்டத்தில் 4 விக்கெட்டுகள் எடுத்தார்.




# தம்புள்ளை ஜெய்ன்ட்ஸை பந்தாடிய ஜப்னா கிங்ஸ்

## அடுத்த சுற்றுக்கு முதல் அணியாக முன்னேறியது

லங்கா பிரீமியர் லீக் தொடரில் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணியை 7 விக்கெட்டுகளினால் வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அடுத்த சுற்றுக்கு முதல் அணியாக முன்னேறியது.

2021 லங்கா பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரின் 14 ஆவது போட்டி திங்கட்கிழமை இரவு கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ், தசுன் சானக்க தலைமையிலான தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இந்நிலையில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணி ஜப்னா அணியினரின் சுழல் பந்து வீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாது 14.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து, 69 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

லங்கா பிரீமியர் லீக் போட்டி வரலாற்றில் ஒரு அணி எடுத்த குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணியின் 69 ஓட்ட எண்ணிக்கை பதிவானது.

ஜப்னா அணி சார்பில் பந்து வீச்சில் அசத்திய சதுரங்க டி சில்வா 4 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றினார். மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுகளையும், வனிந்து ஹசரங்க மற்றும் அசேன் பண்டார ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

70 ஓட்டம் என்ற இலகுவான வெற்றி இலக்கினை துரத்திய ஜப்னா கிங்ஸ், 3 விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஜப்னா அணி சார்பில் ஆரம்ப வீரராக களமிறங்கிய உபுல் தரங்க 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், அதன் பின்னர் களமிறங்கிய வனிந்து ஹசரங்க அவிஷ்க பெர்னாண்டோவுடன் இணைந்து அதிரடி காட்டினார். வனிந்து ஹசரங்க 18 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்னர் வந்த டாம் கோஹ்லர்-காட்மோர் இம்ரான் தாஹிரின் பந்துவீச்சில் எதுவித ஓட்டங்களையும் பெறாது போல்ட் ஆனார்.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக அவிஷ்க பெர்னாண்டோ - அசேன் பண்டார ஜோடி சேர்ந்து துடுப்பெடுத்தாட 9.2 ஓவர்களில் 71 ஓட்டங்களைப் பெற்று, தொடரில் 5 ஆவது வெற்றியை பதிவு செய்தது ஜப்னா கிங்ஸ். போட்டியின் ஆட்ட நாயகன் விருதை சதுரங்க டி சில்வா பெற்றுக் கொண்டார்.




# தென் ஆபிரிக்க டெஸ்ட் ரோஹித் சர்மா விலகல்

தென் ஆபிரிக்க அணியுடன் இந்தியா மோதவிருக்கும் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து இந்திய துணைக் கப்டன் ரோஹித் சர்மா காயம் காரணமாக விலகினார்.

அவருக்குப் பதிலாக இந்திய 'ஏ' அணியின் கப்டன் பிரியங்க் பஞ்சல் பிரதான அணியில் இணைந்திருக்கிறார். தென் ஆபிரிக்க 'ஏ' அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய 'ஏ' அணிக்கு தலைமை தாங்கிய பிரியங்க் பஞ்சல், ஒரு ஆட்டத்தில் 96 ஓட்டங்கள் அடித்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரோஹித்துக்குப் பதிலாக துணைக் கப்டனாக தற்போது எவரையும் பி.சி.சி.ஐ. அறிவிக்கவில்லை. கே.எல்.ராகுல் அந்த இடத்துக்கு பிரதான தேர்வாக இருக்கலாம் எனத் தெரியும் நிலையில், அதற்கான போட்டியில் ரிஷப் பந்த், அஸ்வின் ஆகியோரும் இருக்க வாய்ப்புள்ளது.

இடது கால் மூட்டுக்கு பின்பகுதியில் ஏற்கனவே ஏற்பட்ட காயத்தின் தாக்கம் தற்போது ரோஹித்தை மீண்டும் பாதித்துள்ளது. அதன் காரணமாக அவர் விலகியிருக்கிறார். முன்னதாக, மும்பையில் ரோஹித் திங்கட்கிழமை பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பந்துவீச்சு பயிற்சியாளர் ராகவேந்திரா வீசிய பந்தில் ஒன்று அவரது கையை பதம் பார்த்தது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் கூறுகையில், கையில் ஏற்பட்ட அந்தக் காயம் பெரிதாக இருக்கவில்லை. அதற்கு லேசான சிகிச்சை எடுத்துக்கொண்டு ரோஹித் தொடர்ந்து துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால், காலில் முன்பு காயம் ஏற்பட்ட அதே இடத்தில் மீண்டும் அதன் தாக்கம் தெரிந்தது.

பொதுவாக ஹாம்ஸ்ட்ரிங் காயத்திலிருந்து மீள 4 வாரங்கள் வரை ஆகலாம். அதனால் அவர் டெஸ்ட் தொடரில் இருந்து விலகியிருக்கிறார். காயத்தின் தீவிரம் குறித்து விரைவில் தகவல் தெரியும். ரோஹித் இல்லாத நிலையில் டெஸ்ட் தொடரில் கே.எல்.ராகுலுடன் இணைந்து மயங்க் அகர்வால் இனிங்ஸை தொடங்க வாய்ப்புள்ளது என்றன.



# மேற்கிந்தியத் தீவுகள் அணியை இலகுவாக வீழ்த்திய பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகள் அணி, பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 'ரி - 20', 3 'ஒருநாள்' ஆட்டங்களில் விளையாடுகிறது. அனைத்து ஆட்டங்களும் கராச்சியில் நடைபெறுகின்றன.

இதில் முதல் ரி-20 ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்கள் குவித்தது. ரிஸ்வான் 78 ஓட்டங்களும் ஹைதர் அலி 68 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மோசமாக விளையாடி 19 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. முகமது வாசிம் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருது ஹைதர் அலிக்கு வழங்கப்பட்டது.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road on Wednesday 15th of December 2021.